உ

ஸ்ரீ குருப்யோ நம:

வாஸுதேவாய நம:

ஓம்.

இஃது

சுக்லயஜுர்வேதத்தின்

ஜாபாலசாகையின் உபநிடதமாகிய

ஜாபாலோபநிடதத்தின்

பொழிப்புரையும் விசேடவுரையும்

——(*)——

பிரம்மஸ்ரீ

சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்திராதிபரான

பரஸமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

ஸ்ரீ ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களால்

இயற்றப்பட்டு

——(*)——

பிரம்மஸ்ரீ

திரு-சிவானந்த சாகரயோகீச்வரரவர்களால்

சோதிக்கப்பட்டு

——(o)(*)(o)——

திருவையாற்றுக்கருகில்

(உக்காவேரி) ஸ்ரீ ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு

1900

இதன் விலை அணா 7

சிவமயம்

ஜாபாலோபநிடதமுகவுரை

ஜாபாலோபநிடதமென்பது ஐந்துண்டு. அவற்றின் வேற்றுமையறியப்படுவதற்காக அவிமுக்த ஜாபாலோபநிடதம், 'பிருஹஜ்ஜாபாலோபநிடதம்' 'பஸ்மஜாபாலோபநிடதம்' 'ருத்ராட்ச ஜாபாலோபநிடதம்' 'ஜாபால்யுபநிடதம்' எனவழங்குவார்கள். இவற்றுள் அவிமுக்தஜாபாலம் சுக்லயசுசிலும், ருத்ராட்ச ஜாபாலம் ஜாபாலி இவைகள் சாமவேதத்திலும், பிருஹஜ்ஜாபாலம், பஸ்ம ஜாபாலம் இவைகள் அதர்வணவேதத்திலும் படிக்கப்படுகின்றன. அதர்வணவேதத்திலுள்ள பிருஹஜ்ஜாபால, பஸ்ம ஜாபாலங்களும் ஜாபாலமென்ற பெயரொற்றுமைகொண்டு இவ்வுபநிடதமே யாமெனமயங்கி நாராயணபட்டர் இதை அதர்வண வேதத்துபநிடதமாமென, அதற்குறிய மந்திரத்துடன் சாந்தியிட்டு உரையிட்டனர். இவ்வைந்துபநிடதங்களும் விபூதி ருத்ராட்சம், ஸ்ரீபஞ்சாட்சரம், சிவார்ச்சனம்- பில்வபத்ரங்களென்ற பஞ்ச வைதிக பாசுபதமுத்திரைகளுக்கு பரமஹம்ஸ பிரவிருத்திகளான அத்தியாச்சிரமிகளே முக்கியாதிகாரிகளென்றும், மற்ற சர்வாச்சிரமிகளும் முக்திக்கந்தரங்க சாதனமான மேற்கண்ட பஞ்சமுத்திரைகளைத்தத்தம் ஆச்சிரமங்களுக்கேற்றபடி அனுஷ்டித்துக் கிருதார்த்தராம் வழியீதெனவும் நிரூபித்தன. அவற்றுள் ஸ்ரீ பஞ்சாட்சராதி திவ்ய நாமதேயகவைபவத்தை இவ்வவிமுக்த ஜாபாலோபநிடதம் விசேஷமாய் நிரூபித்து மோட்சசாதக வைதிகமந்திரங்களில் ஸ்ரீகைவல்யோபநிடதமிறுதியிற் குறித்தவாறு சதருத்திரீயமே (ருத்திராத்தியாயமே) மிகச்சிறந்ததாமென்றும். இருபுருவத்தினடுவெனப்படும் ஆக்ஞாஸ்தானத்தில் சோதிலிங்க மூர்த்தியான ஸ்ரீ குருவை ஸ்ரீ ருத்திராத்தியாய ஜபபூர்வமாய் இடையறாது தியானித்து வந்தவற்கு அண்டபிண்டங்களில் அவிமுக்தமெனப்படும் ஸ்ரீகாசிக்கு சுதந்திரனை ஏகநாதன் திருவருளால் பிரணவ மஹாவித்தையும் ஸ்ரீபஞ்சாட்சராதி வித்தைகளும் கிடைக்கப்பெற்று அக்கணத்திற்றானே பரசிவசாயுஜ்யதிவ்ய முத்திகிடைக்

குமென்றும், அதற்கு உரியவர் அண்டத்தில் காசிக்ஷேத்திரத்தில்
எல்லாச் ஜந்துக்களுமென்றும், மற்ற விடத்தில் பிண்டாவிமுக்
தோபாசகர்களான ஸர்வாச்ரமிகளென்றும் முழங்கியது. இதனை
தொல்லாசிரியர் பலர் பிரமாணமாக வெடுத்து வழங்கிவந்திருக்கி
ன்றார்கள். வேதபாஷ்யக் காரர்களும் வேதாந்தபாஷ்யக்காரர்க
ளும் இவ்வுபநிடதத்தை ஒவ்வோர் பிரகரணங்களிலெடுத்தாண்டு
யசுர்வேதபாஷ்யத்தில் ஸ்ரீ மாதவாசாரியரும் பாஸ்கராசாரியரும்
ஸ்ரீ ருத்திராத்தியாய முகவுரையிலிதனை யெடுத்துதகரித்தார்
கள். மஹீதராசாரியரும் சுக்ல யசுர்வேதபாஷ்யத்தில் இதனை ஸ்ரீ
ருத்திராத்தியாயமகிமையிலேயே எடுத்தாண்டனர். உவ்வடாசா
ரியர் கர்க்கியாசாரியர் முதலாயினோரும் இதனை உதகரித்தனர்.
ஜகத்குருசுவாமிகள் வேதாந்தபாஷ்யத்திலும் மூன்றாம் அத்தியா
யத்து நான்காம் பாதத்து ஒன்றிரண்டதிகரணங்களாகிய புருஷா
ர்த்தாதிகரணம், பராமர்சாதிகரணம் இவற்றின் இறுதிகளில்
இவ்வுபநிடதவசனங்களை யெடுத்து விசாரித்திருக்கின்றனர். அ
வ்வாசாரியர் பாஷ்யத்தை யனுசரித்த பிரம்மவித்யாபரணம் முத
லிய கிரந்தங்களிலும் இவ்வுபநிடத வசனத்தின் சம்பந்தமுண்டு.
மற்ற பாஷ்யங்களையியற்றிய ஸ்ரீகண்ட சிவாசாரியர், பவதேவமி
ச்ரபண்டிதர் ராமானுஜாசாரியர் முதலிய எவரும் அதே பிரகரணத்
தில் இவ்வசனத்தை யெடுத்தாண்டனர். இவனமே ஸ்ரீ மதப்ப
யதீக்ஷிதராதி பெரியோர்களும் வைத்யநாத தீக்ஷிதர் முதலியநிப
ந்தனக்காரர்களும் இவ்வசனத்தையெடுத்து ஸ்ரீ ருத்திரப்பிரசம்
சையையெடுத்து வழங்கினர். ஆகவே இவ்வுபநிடதம் எவ்வழியா
னும் சர்வாசாரிய பரிக்ரகமுள்ள உபநிடதமாமென்க. இச்சாகை
க்குமகரிஷி, சத்யகாமரென்ற ஜாபாலரென்றார் நாராயணபட்டர்.
அவராயினும் மற்றெவராயினுமாகுக. இவ்வுபநிடதத்திற் கூறப்
பட்டுள்ள விஷயங்களைச் சிலபுராணங்களில் அனுவதித்தாண்டு
அவைகளைச் சமயம் நேர்ந்துழிவிரிப்பாம். மேற்கண்ட நியாயங்
களால் இவ்வுபநிடதம் உருவத்திற்சிறிதாயினும் பெரிதேயென்க.
மேலும் ஸ்ரீ ருத்திரத்திற்கு வியாக்கியானம் செய்யவெழுந்தபலரும்
இவ்வுபநிடதத்தை சிரமேற்கொண்டாரெனத் துணிந்திடுக. இவ
வுபநிடதத்தில் ஆறுகண்டங்களுண்டு. அவற்றில் முதற்கண்டம்
பிருஹஸ்பதி யாக்ஞவல்கியர் சம்வாதமாய் தாரகத்வத்தை நிரூபிக்கு

து. இரண்டாவது அத்திரியாக்ஞயவல்கிய சம்வாதமாய் அவிமுக்த சொரூபத்தை நிரூபித்தது, மூன்றாவது முற்குறித்த தாரகமந்திரம் உள்ளிட்ட ஸ்ரீ உருத்திராத்தியாயத்தைப்புகழ்ந்தது. நான்காவது ஜனகயாக்ஞவல்கிய சம்வாதமாய் சந்நியாச விதியைக் குறித்தது. ஐந்தாவது அத்ரி யாக்ஞவல்கிய சம்வாதமாய் சந்நியாசத்தை புகழ்ந்தது. ஆறாவது உபசங்காரரூபமாய் இவ்வித்தையின்பயனை நிரூபித்தது. அற்றேல் சந்நியாசத்தை ஸ்பஷ்டமாய் விதித்த இவ்வுபநிடதத்தை எடுக்காது ஆசிரியர்பாதராயணர் சந்நியாசவிதி கற்பனைக்கு கஷ்டப்பட்டு சூத்திரமியற்றியதேதனாலோவெனின், இவ்விஷயத்துக்கு எல்லாபாஷ்யக்காரரும் சமாதானத்தை விரிவாய்ச் சொல்லியிருப்பதால் யாமதற்குப் புதிதாய்ச் சொல்ல வேண்டுவதொன்றுமில்லை. சம்சயமில்லாது ஸ்பஷ்டமாய் ஒவ்வோர் விஷயங்களை நிரூபிக்கும்வேதாந்தவாக்கியங்களையும் வேதாசாரியர் எடுக்காமைக்குக் காரணம் அவற்றையெடுத்தால் அதிகரண லக்ஷணம் குன்றுமென்று முன்னரே கைவல்யப்பேருரையிற் குறித்தோம். அதனையே யிங்கு மமைத்துக்கொள்க. இவ்வுபநிடதத்திற்கு ஸ்ரீசங்கரானந்த யோகிகள் நாராயணபட்டர் உபநிஷத் ப்ரம்மேந்திர ஸ்வாமிகள் முதலிய சிலர் வியாக்கியானம் செய்திருக்கின்றார்கள். இதற்கே சிலகாலத்துக்குமுன் எம்மால் செய்யப்பட்ட வடமொழிவியாக்கியானமொன்றுண்டு. பலவியாக்கியானங்களையும் பலப்ரதி ரூபங்களையும் கொண்டு இயன்றவரை பரிசோதித்து தமிழுலகத்துள்ளார் தாரக வித்தையையறிந்துய்யுமாறு இவ்வுபநிடதத்திற்கோர்சிற்றுரையியற்றினோமாதலின் இதற்றுள் கொள்ளற்பாலனவைகளைக் கொண்டு யாமெடுத்த இம்முயற்சியிடையே தளர்வுறாது முற்றுப் பெறுமாறு திருவருளை முன்னிட்டு ஆசி கூறுவாரென அகமகிழ்ந்துவேண்டுகின்றனம்.

சுபம்.

ஶிவாய குரவே

ஶ்ரீமஹாகுருப்யோ நம: |

ஶ்ரீவ்யாஸகுரவே நம: |

ஶுக்லயஜுர்வேதகத ஜாபாலோபநிஷத்

பாராயணக்ரம: ||

—(*)—

ஹரி: ஓம் ||ஓம்||(க) பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே | பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே || ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: || ப்ருஹஸ்பதிருவாச யாஜ்ஞவல்க்யம் யதனு குருக்ஷேத்ரம் தேவானாம் தேவயஜனம் ஸர்வேஷாம் பூதானாம் ப்ரஹ்மஸதனம் அவிமுக்தம் வை குருக்ஷேத்ரம் தேவானாம் தேவயஜனம் ஸர்வேஷாம் பூதானாம் ப்ரஹ்மஸதனம் தஸ்மாத்யத்ர க்வசன (உ) கச்சதி ததேவ (௩) மன்யேதேதம் வை குருக்ஷேத்ரம் தேவானாம் தேவயஜனம் ஸர்வேஷாம் பூதானாம் ப்ரஹ்மஸதனம் அத்ர ஹி ஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு ருத்ரஸ்தாரகம் ப்ரஹ்ம வ்யாசஷ்டே [௪] யேனாஸாவம்ருதீ பூத்வா மோக்ஷீ பவதி தஸ்மாதவிமுக்தமேவ நிஷேவேதாவிமுக்தம் ந விமுஞ்சேதேவமேவைதத் (௫) யாஜ்ஞவல்க்ய: ||—||க||

(க) ஸத்யம் பூர்ணமிதி ஶாந்தி:||ஸாமர்த்யவாத ||

(உ) மத்வதிதவா'பாடஶ்ச ||

(௩) அவிமுக்தமிதம் அவிமுக்தமேவேதம் (இதிவா)

(௪) இதி நாஶாவஶ்யேஶி ஸம்க்ஷா இதிவா |

(௫) யாஜ்ஞவல்க்ய (இதிவா)

[illegible]

[illegible]

(க) [illegible]

(உ) [illegible]

(ங) [illegible]

(ச) [illegible]

𑌅𑌥 𑌜𑌨𑌕𑍋 𑌹 𑌵𑍈𑌦𑍇𑌹𑍋 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌮𑍇-
𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑌨𑍁𑌬𑍍𑌰𑍂𑌹𑍀𑌤𑌿 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚
𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌯 𑌗𑍃𑌹𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍
(௧) 𑌗𑍃𑌹𑌾𑌦𑍍𑌵𑌨𑍀 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌵𑍇𑌤𑌰𑌥𑌾 𑌬𑍍𑌰-
𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍। 𑌗𑍃𑌹𑌾𑌦𑍍𑌵𑌾 𑌵𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 𑌅𑌥 𑌪𑍁𑌨-
𑌰𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑌾 𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑌾 𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋 𑌵𑌾𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋 𑌵𑍋𑌤𑍍𑌸-
𑌨𑍍𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑌨𑌗𑍍𑌨𑌿𑌕𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌹𑌰𑍇𑌵 𑌵𑌿𑌰𑌜𑍇𑌤𑍍𑌤𑌦𑌹𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰-
𑌜𑍇(௨)𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑍈𑌕𑍇 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌾𑌮𑍇𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿-
𑌤𑌦𑍁 𑌤𑌥𑌾 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑍀𑌮𑍇𑌵 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 (௩) 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑌿
𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑍇𑌵𑍈𑌤𑌯𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌤𑍍𑌰𑍈𑌧𑌾-
𑌤𑌵𑍀𑌯𑌾𑌮𑍇𑌵 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌤𑌯𑍈𑌵 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌧𑌾𑌤𑌵𑍋 𑌯𑌦𑍁𑌤 (௪)
𑌯𑌤𑍍 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌅𑌯𑌂 𑌤𑍇 𑌯𑍋𑌨𑌿𑌰𑍃𑌤𑍍𑌵𑌿𑌯𑍋 𑌯𑌤𑍋 𑌜𑌾-
𑌤𑍋 𑌅𑌰𑍋𑌚𑌥𑌾𑌃। 𑌤𑌂 𑌜𑌾𑌨𑌨𑍍𑌨𑌗𑍍𑌨 𑌆𑌰𑍋𑌹𑌾𑌥𑌾
𑌨𑍋 𑌵𑌰𑍍𑌧𑌯𑌾 𑌰𑌯𑌿𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌜𑌿𑌘𑍍𑌰𑍇𑌤𑍍
𑌏𑌷 𑌹 𑌵𑌾 𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛 𑌸𑍍𑌵𑌾-
𑌹𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍇𑌵𑍈𑌤𑌦𑌾𑌹 𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑌗𑍍𑌨𑌿𑌮𑌾-
𑌘𑍍𑌰𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 (௫) 𑌯𑌦𑌗𑍍𑌨𑌿𑌂 𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌦𑌪𑍍𑌸𑍁 𑌜𑍁𑌹𑍁-
𑌯𑌾𑌦𑌾𑌪𑍋 𑌵𑍈 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍋 𑌦𑍇-
𑌵𑌤𑌾𑌭𑍍𑌯𑍋 𑌜𑍁𑌹𑍋𑌮𑌿 𑌸𑍍𑌵𑌾𑌹𑍇𑌤𑌿 (௬) 𑌹𑍁𑌤𑍍𑌵𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯

---

(௧) 𑌗𑍃𑌹𑍀 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌵𑌨𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍। 𑌵𑌨𑍀 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍॥
𑌇𑌤𑌿 (𑌪𑌾)

(௨) 𑌤𑌦𑍇𑌕𑍇 𑌇𑌤𑌿 (𑌪𑌾)

(௩) 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌹𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 (𑌪𑌾)

(௪) 𑌯𑌦𑍁𑌤 𑌇𑌤𑌿 (𑌪𑌾)

(௫) 𑌯𑌦𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌂 (𑌇𑌤𑌿 𑌪𑌾)

(௬) 𑌹𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 (𑌇𑌤𑌿 𑌪𑌾)

ப்ராஶ்நீயாத் ஸாஜ்யம் ஹவிரநாமயம் (௧) மோக்ஷமந்த்ர
ஏஷத்ரய்யேவம் விந்தேத் (௨) தத்ப்ரஹ்ம ததுபாஸிதவ்ய
மேதமேவைதத் (௩) பகவந்நிதி யாஜ்ஞவல்க்ய: | — || ௪ ||

அத ஹைநமத்ரி: பப்ரச்ச யாஜ்ஞவல்க்யம் ப்ருச்சாமி த்வா
யாஜ்ஞவல்க்ய அயஜ்ஞோபவீதீ கதம் ப்ராஹ்மண இதி ஸ ஹோ
வாச யாஜ்ஞவல்க்ய இதமேவாஸ்ய தத்யஜ்ஞோபவீதம் ய ஆத்
மா (௪) அப: ப்ராஶ்யாசம்யாயம் விதி: (௫) பரிவ்ரா
ஜிநாம் வீராத்வாநே வா அநாஶகே வா அபாம் ப்ரவேஶே வா அக்நி
ப்ரவேஶே வா மஹாப்ரஸ்தாநே வா அத பரிவ்ராட்விவர்ண
வாஸா முண்டோ(அ)பரிக்ரஹ: ஶுசிரத்ரோஹீ (௬) பை
க்ஷாணோ ப்ரஹ்மபூயாய பவதி || யத்யாதுர: ஸ்யாந்ம
நஸா வாசா வா ஸந்ந்யஸேத் ஏஷ பந்தா ப்ரஹ்மணா ஹா
நுவித்தஸ்தேநைதி ஸந்ந்யாஸீ ப்ரஹ்மவிதித்யேவ மே
வைஷ பகவந்நிதி வை யாஜ்ஞவல்க்ய: || ௫ ||

தத்ர பரமஹம்ஸா நாம ஸம்வர்தகாருணி ஶ்வேத
கேது தூர்வாஸ ருபு நிதாக ஜடபரத தத்தாத்ரே
ய ரைவதக ப்ரப்ருதயோ அவ்யக்தலிங்கா அவ்யக்தாசாரா அ
நுந்மத்தா உந்மத்தவதாசரந்த: த்ரிதண்டம் கமண்டலும் || ௭ ||
ஶிக்யம் ஜலபாத்ரம் ஶிகாம் யஜ்ஞோபவீதம் ச

|௧| மோக்ஷமந்த்ர (இதிவா)
(௨) தத்ப்ரஹ்ம ததுபாஸிதவ்யம் (இதிவா)
(௩) பகவந்நித்யேவ யாஜ்ஞவல்க்ய: (இதிவா)
(௪) ஆத்மா இதி க்வசித் ||
(௫) பரிவ்ராஜகாநாம் ப்ரவ்ராஜிநாமிதி வா (பா)
(௬) பைக்ஷாண (இதிவா)
(௭) பாத்ரம் ஶிக்யமிதிவா (பா)

பரித்யஜ்யாத்மாநமந்விச்சேத். யதாஜாதரூபதரோ நிர்க்ரந்தோ நிஷ்பரிக்ரஹஸ்தத்தத்ப்ரஹ்மமார்கே ஸம்யக்ஸம்பந்நஃ ஶுத்தமாநஸஃ ப்ராணஸந்தாரணார்த்தம். யதோக்தகாலே விமுக்தோ பைக்ஷமாசரந்நுதரபாத்ரேண லாபாலாபயோஃ ஸமோ பூத்வா ஶூந்யாகாரதேவக்ருஹத்ருணகூடவல்மீகவ்ருக்ஷமூலகுலாலஶாலா (௧) அக்நிஹோத்ர நதீபுலிநகிரிகுஹரகந்தரகோடரநிர்ஜரஸ்தண்டிலேஷு (௨) அநிகேதவாஸ்யப்ரயத்நோ நிர்மமஃ ஶுக்லத்யாநபராயணோ (௩) ஽த்யாத்மநிஷ்டோ ஽ஶுபகர்மநிர்மூலநபரஃ ஸந்ந்யாஸேந தேஹத்யாகம் கரோதி ஸ பரமஹம்ஸோ நாம ஸ பரமஹம்ஸோ நாமேதி ॥ ௬ ॥

ஓம் பூர்ணமதஃ பூர்ணமிதம் பூர்ணாத்பூர்ணமுதச்யதே । பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥ ஓம் ஶாந்திஃ ஶாந்திஃ ஶாந்திஃ ॥

ஜாபாலோபநிஷத் ஸமாப்தா ॥

(ஓம் தத்ஸத்)

——(*)——

(௧ அக்நிஹோத்ர நதீ (பா)
(௨) அநிகேதவாஸீ (இதி பா)
(௩) அத்யாத்மநிஷ்டாஶுபகர்ம (இதி பா]

உ

சுபம்.

ஜாபாலோப நிடதம்.

மூலமும் உரையும்.

அவதரணிகை.

சர்வவேதாந்தங்களுக்கு முரிய சம்பிரதாயத்தை யனுசரித்து இச்சாபாலோபநிடதமும் ஓர் சதாசாரிய சிஷ்ய சம்வாதமுகத்தால் வித்தையை வெளியிடுகின்றது.

ப்ருஹஸ்பதிருவாச யாஜ்ஞவல்க்ய மென்று

(இ—ள்.) பிருஹஸ்பதி யாக்ஞவல்கியரைக் கேட்டார். என்பது.

(வி—ரை.) பிருஹஸ்பதி யென்று சிடனைக் குறித்தமையால் மகாமேதாவியாயுள்ளவனே இவ்வித்தைக்குப் பரமாதிகாரியெனவும், மானுஷானந்தம்முதல் சமஸ்தானந்தங்களையும் கீழ்ப்படுத்தி பிரம்மானந்தத்திற் கடுத்த இரண்யகர்ப்பானந்தத்திற்குக் கீழான ஆனந்தமுள்ளவர் பிரஸ்பதி யென்று தைத்திரீயோபநிடதம் கூறுகின்றது. ஆதலால் பிருகஸ்பதி ஸ்தானத்தைப் பெற்றவர்களுக்கு ப்ராஜாபத்யானந்த மொன்றும், பிரம்மானந்தமொன்றுமே விரும்பத்தக்கது. அவற்றுள் பிரம்மக்ஞானம் நிறைந்த பிருகஸ்பதிக்கு சவிசேஷானந்தமெனச் சொல்லப்படும் பதமுக்தியானந்தரூபமான இரண்ய கர்ப்பானந்தம் அவ்வளவு சிரேஷ்டமன்றென்றெண்ணி, என்றும் குன்றாத நிலைமையில் நிர்விசேஷமாய் நிற்கும் பிரம்மாநந்தத்தையே கருதி சிரவண்யோபாஸ்தி பலத்தால் இவ்வுலகத்தே ஜீவன் முக்தனாய் பிரம்மநிஷ்டராய யாக்ஞவல்கியரை அவர் கேட்டனரென்றது தஜ்ஞேவொ தத்க்ஷேத்ரிகெ அஃதேது

ரத்தினுமஃகே அருகினும், என்ற சுருதியின் உட்கருத்தையறிந்து நம்மைப்போல் பல உலகங்களில் கிரமமாய் ஆனந்தானுபவங்களைப் பெற்றும், ஈசுவரனை சர்வசொரூபனாய்ப் பாவித்து உபாசிக்கும் வகையறியாது மீண்டும், அதிகாரமதத்துக்குட்சிக்குண்டு வருத்தமுறாது இங்கிருந்தே பரமவைராக்கியத்தால் எல்லாப்போகங்களையும் வெறுத்து பிரம்மானந்தானுபவ பாக்கியம் பெற்ற யாக்ஞவல்கியர் தமக்குரிய ஆசிரியனென்று கண்டறிந்த பெருமையையே பிருஹஸ்பதியினிடத்து அமைத்து சுருதி குறித்ததாமெனக. சித்தாந்தங்களை வாதம் ஜல்பம் விதண்டை முதலிய வழிகளால் எடுத்து நிரூபிப்பது வேதவழக்காதலால், ஈண்டு ஜல்பகதையாய்க் கொள்ளின் இவ்விருவரும் சம்பிரதானரும் ஆகலாம். வாதகதையாய்க் கொண்டாலும் அங்ஙனமேயாம். இஃது விதண்டையோ அல்ல. குருசிஷ்ய சம்வாதமென்பது உபநிடதங்களில் பெரும்பான்மையில் அமைந்ததாகலின் அவ்விதமமைத்துரைசெய்தோம். 'அடைந்து பணிந்து முதலிய சொற்களால் சீடன் தொழிலையும், உபதேசம் அனுக்கிரகம் முதலிய சொற்களால் ஆசிரியன் தொழிலையும், இவ்வுபநிடதம் சிறப்பிக்காமையின் சமநிலைபெற்ற இரு முனிவர்களுக்கு இஃது ஓர் சம்வாதரூபமெனவும் பொருள் செய்வதிற் குற்றமில்லை. அங்ஙனமாயினும், தேவாசாரியர் பதவியைப் பெற்று பிரமதேவானந்தத்திற்கு அடுத்த ஆனந்தாதிகாரியாயும் குரு என்ற சொல்லுக்கு இடுகுறிப் பொருளாயும் வாசஸ்பதி, வாக்குக்கு நாயகனென்ற பெரும்புகழும் சர்வவேதாதிபத்யமும் அனேக கர்மங்களாலாராதிக்கத்தக்க பெருமையும் வாய்ந்த பிருஹஸ்பதியை சீடனாகக்கொள்ளுதல் சீராமோவெனின் பிரம்மானந்தானுபவம் நிறைந்த பிரும்மநிஷ்டனது பெருமை அதிலும் மேலானதென 'ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய' விருப்ப மொழிந்த சுரோத்திரியனுக்கும் என்று தைத்திரீய சுருதி கூறுதலால் அது கூடும். அனேக உபநிடதங்களில் பிருஹஸ்பதி யாக்ஞவல்கிய சம்வாதமாகவே இவ்வவிமுக்தசொரூபநிரூபணமும் தாரகவித்தையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வுபதேசம் மிகச் சிறந்ததென்பதை அதிகமேதும் சொல்லிவிளக்கவேண்டுவதில்லை.

அவதாரணிகை

கேள்வியைக்குறிக்கின்றார்.

யதநு குருக்ஷேத்ரம் தேவாநாம் தேவயஜநம் ஸர்வேஷாம் பூதாநாம் ப்ரஹ்மஸதநம் என்று

(இ—ள்.) எது குருக்ஷேத்திரத்துக் கடுத்தது. அல்லது குருக்ஷேத்திரத்துக்கு மேலானது தேவதைகளுக்கு தேவயஜனஸ்தானமாயுள்ளது? சர்வபூதங்களுக்கும் பிரம்ம சதனமானது. எ—று.

(வி—ரை) குருக்ஷேத்திரத்துக் கடுத்த தென்பது குருக்ஷேத்திரத்துக்கு கீழ்புறத்திலண்டத்திலமைந்தமையாலும், பிண்டத்தில் தர்சனோபநிடதம் குருக்ஷேத்ரம் குசஸ்தாநே, குருட்சேத்திரம் தனத்தானத்திலுள்ளது என்று குறித்தவாறு அக்குருக்ஷேத்திரஸ்தானமான தனத்திலும் மேலான அடுத்த ஆக்ஞாஸ்தானத்தில் இஃதுளதாதலாலும் என்க. குருட்சேத்திரம் அண்டத்திலும் பிண்டத்திலும் இதற்குமேல்புறத்தும் கீழ்புறத்தும் அமைக்கப்பட்டமையின் குருட்சேத்திரத்திற்கடுத்ததென்றேம். பெருமையில் அதிலும் மேலானதென்றேம். யத் - அநு - குருக்ஷேத்ரம் என்று பிரித்தால் எது குருட்சேத்திரத்துக்கு அடுத்தது என்றபொருளும் யத் - அநு - குருக்ஷேத்ரம் என்று மூன்று பதங்களாக்கி குருக்ஷேத்ரம் யதநு என்று கூட்டினால்குருட்சேத்திரம்எதற்குகீழ்ப்படடதேஎன்றும் பொருளாகுமாதலின் அதற்குஇருவகைப் பொருளுமபமத்தோமென்க. இங்கு குருட்சேத்திரமென்ற சொல்லுக்கு ஒரு சா முக்திகாமர்களுக்கு ஒருக்ஷேத்திரத்தைச்செய் (தேஹஸ்யமுக்திகாரிணாம்) அவிமுக்தம் க்ஷேத்ரம் குருக்ஷேத்ரம்) என்றுபிரார்த்திக்கப்பட்டுபேறுசெய்யடமை யால் வாரணசியென்ற காசிட்சேத்திரமே குருட்சேத்திரமாமெனபொருளுரைத்தாருமுளர். அவர்பக்கத்தில், அனேகவுபநிடதங்

களிற் படிக்கப்படும் இவ்வுபநிடத வசனத்திலமைந்த (அநு) அநு. என்றசொல் அவலமாய் ஒழிவதே பெருங்குற்றம். ...... "...... நவ் ...... " என்ற பாணினி சூத்திரங்களால் அநு என்றசொல்லுக்கு ஓர்பகுதியும், மேற்பட்டதும் கீழ்ப்பட்டதும் பொருளாதலின் யாம் முற்காட்டியபடி அவ்வநு என்னுஞ்சொல்லைபிரித்துக்கூட்டும் வகைகளால் "எதுகுருக்ஷேத்திரத்தின்பகுதி? எதன்பகுதிகுருக்ஷேத்திரம்? எதுகுருக்ஷேத்திரத்துக்கடுத்தது, எதற்கடுத்தது குருக்ஷேத்திரம் எதற்கு கீழுள்ளது குருக்ஷேத்திரம்? எது குருக்ஷேத்திரத்துக்குமேல்? என்றபலவிதப் பொருள்கள் கிடைக்கின்றன. இவ்வளவுபொருள் கொடுக்கத்தக்க அநுவென்ற சொல்லைவியர்த்தப்படுத்தியும் எப்பிரமாணங்களிலும் அகப்படாதபடி குருக்ஷேத்திரமென்ற சொல்லுக்குப் பொருளுரைத்தும் முக்கியார்த்தமாக கௌணார்த்த ஸ்வீகாரக் குற்றங்களுக்கு அகப்பட்டுக்கொள்வது அபரிசீலனத்தாலுண்டாவதேயென்றொதுக்கிடுக. தேவர்களுக்குதேவயஜனஸ்தானமென்றதும்மனிதர்களுக்குள் தேவயாகம் செய்பவர்களுக்கு உலகத்தில் புண்ணியநதிதீராதிகள் ஸ்தானமாவது போல் தேவர்களுக்குட்சிறந்தமகாதேவாதிகளையுத்தேசித்து யாகம் செய்வதற்கு அண்டத்தில் ஸ்ரீகாசிஸ்தானமென்பதும் பிண்டத்தில் இந்திரியாபிமானிகளானதேவர்களே தேவர்களெனப்படுவோர்களாதலின், "யஜ்ஞேந யஜ்ஞமயஜந்த தேவா:" யக்ஞத்தால் யக்ஞனைப்பூசித்தனர் சுரர். என்று அவர்கள் செய்தயாகத்தை புருஷசூக்தம் கூறியவாறு, செய்தவிடம் அவிமுக்தமென்ற ஸ்தானமெனவும் மேலேவரும் விடைமுகத்தால் தெரியப்படும். எல்லாப்பூதங்களுக்கும் பிரம்மசதனம் என்றது. மானிடத்தன்மை முதலியசரீரதர்மங்களையும், பிராமணத்தன்மைமுதலிய வர்ணதர்மங்களையும், பிரம்மசரியம் முதலிய ஆச்சிரமதர்மங்களையும், வித்தைவிசாரம் வைராக்கியம் முதலியசாதனங்களையும் எதிர்நோக்காது சத்யோநிர்வாணமென்றபிரம்மபாவத்தை சர்வஜந்துக்களுக்குங்கொடுக்கக்கூடிய இடமெனும் பொருள் கொடுக்கும். பிண்டத்தில் எவ்வித உபாஸ்திஎவர்களையும் நன்னெறிக்குய்ப் பிக்கும் அதுவே அவ்விதமாம்.

ஆயின் ஈசனது அவ்யாஜகருணாப்பிரவாகத்துக்கு இடமாகக்கூடிய தண்டத்திலெந்த க்ஷேத்திரமென்பதும், எந்தக்ஷேத்திரம் குருக்ஷேத்திரத்தின் மேலானதென்பதும், எந்த விடத்து எல்லாத்தேவர்களும் நற்கருமப்பயனைப் பெற்றார்களென்பதும்' பிருஹஸ்பதி வினவிய க்ஷேத்திரத்திற்கு மூவிலக்கணங்களாம். அங்ஙனம் பிண்டத்தில் தனத்தானமென்ற இதயஸ்தானத்துக்கு மேலாயுள்ளது யாதெனவும், எவ்விடத்துத் தேவர்கள் தம்மைத்தாமறிந்து உய்த்தாரெனவும்' எதனிடத்துச்சென்ற சைதனியம் மீளாதபிரம்மீபாவத்தை பெறுமெனவும், மூவிலக்கணங்களுள்ள இடம் வினவப்பட்டதாம். இங்கண்டத்தில் சவிசேஷ முக்தியும் அது சிவசாரூப்பியமும் பிண்டத்தில் நிர் விசேஷப் பிரம்மீபாவமும், ஒருகொடியிலிருகனியென்ற ஞானத்தால் பிரதீகோபாசனை, நிரன்வயோபாசனைகளாகிய வழிபாடுகளை யனுசரிக்கும் அதிகாரிகளையுத்தேசித்து சொற்சுருங்கப்பொருள் விளங்கமகாமேதாவியின் வினாவிதென்க.

அவதாரணிகை

யாக்ஞவல்கியர் பகர்ந்த விடையைக் காட்டுகின்றார்

அவிமுக்தம் வை குருக்ஷேத்ரம் தேவாநாம்
தேவயஜநம் | ஸர்வேஷாம் பூதாநாம் ப்ரஹ்ம
ஸதநம் || என்று

(இ—ள்) அவிமுக்தமே குருக்ஷேத்திரத்துக்கு அதீத்தது. தேவர்களுக்குத்தேவயஜனமாயுள்ளது; எல்லாப்பூதங்களுக்கும் பிரம்ம சதனமாயுள்ளது

(வி—ரை) அவிமுக்தமென்பது என்றும் ஈசனால் விடப்படாமையானும், பத்தர்களாலென்றும் அடையக் கூடாமையானும் அண்டத்திலும் பிண்டத்திலும். அவிமுக்த மென்பதற்குப்பெயரேற்பட்டது. மற்றது முன்போல். மூலத்திலுள்ள 'வை' என்றசொல் பிரசித்தியைக் குறிப்பதாயினும் கேள்விக்குத் தக்கபடி அஃது 'அநு' என்றசொல்லின் பொருள் மேனின்றதென்க

'அவ்யயா நாநார்த்தகாஸ்ஸ்ம்ருதா:' அவ்வியயங்கள் பல பொருள் கொடுக்கும், என்ற நியாயத்தை இங்கமைத்துக் கொள்க.

அவதரணிகை

அண்டத்தில் ஒவ்வொருக்ஷேத்திரங்களை ஜீவசமஷ்டிசொரூபனாகிய விராட்டுக்கு ஒவ்வொரு அவயவங்களாக நிரூபித்தது பாவனாமாத்திரமே யாகலின், அவ்வித பாவனாசித்தர்க்கு அவிமுக்தம் ஓரே இடமாயிருப்பது எங்ஙனமொவ்வுமெனச் சிடர்க்கு சங்கை நிகழாவண்ணம் அவ்விதபாவனா சித்தர்க்கு நினைத்தவிடமெல்லாம் அவிமுக்தமேயென நிரூபித்துக்காட்டுகின்றார்.

> தஸ்மாத் யத்ர க்வசன க³ச்ச²தி ததே³வ மந்யேத
> இத³ம் வை குருக்ஷேத்ரம் தே³வாநாம் தே³வய
> ஜநம் ஸர்வேஷாம் பூ⁴தாநாம் ப்³ரஹ்மஸத³
> நம் | இதி

(இ—ள்) ஆகையால் அவ்விடம் விட்டெங்கு சென்றாலும் அதனையே இதுவே குருக்ஷேத்திரத்துக் கடுத்தது, தேவர்களுக்கு தேவயஜனமாயுள்ளது, சர்வ பூதங்களுக்கும் பிரம்மசதனமாயுள்ளது என்று நினைப்பான். எ—று

(வி—ரை) ஈசனது திவ்யசொரூப சாட்சாத்காரம் பாவனையினாலேயே கிடைக்குமென்பதை ஸாவஹிதோ ப்ரம்ம பாவனையாலறியத்தக்கது, தமக்கோராச்சிரயமில்லாதது என்றுசுவேதாசுவதரோபநிடதங்கூறியது. மற்று அவ்விதப்பாவனை சுகமாய் வருவதற்காக ஒருவாறு அண்டபிண்டாவிமுக்தங்களான காசிக்ஷேத்திர ஆஞ்ஞியாஸ்தானங்களை அடைந்து அவ்விடம் விட்டெங்கேபோனாலும் அவன் மனோவிருத்தி அதனிடத்தேசெலலுமாதலின், அவனுக்கு நித்தியாவிமுக்த சேவாபாக்கியம் அவனுக்கு கைகூடுமென்பதிற்றடையில்லை என்பது ஆசிரியர்கருத்து. இதனாலேயே ஸ்ரீகாசியாத்திரை செய்து மீண்டும் தமதிம்மை வாழ்க்கையொடுங்கு முன்று சிதம்பரத்தின்கண் ஸ்ரீமன்னட

ராஜவள்ளலார் குஞ்சிதச்சேவடி நீழலடையும்படி அவ்விடம் சேர்ந்த ஸ்ரீமதப்பயதீக்ஷிதேந்திரயோகிகள் தமக்கு விமுக்த மரணம் கிடைக்காமற்போயதென்று மயங்காவண்ணம் தாம் நிரந்தராவிமுக்தோபாசகரென்றும் ஸ்ரீ குருமூர்த்தி சேவகரென்றும் காட்டுவதற்காகவே [illegible] நமாமி [illegible] காசீ | [illegible] தாரகம் [illegible] | பசுக்களையன்றோ பலன்களையளிக்கும் காசியேயங்ஙனம் யாமிருக்குமிடம், வ்யாபகனைவப்பரமான்மா தாரகமெமக்குத் தருவது திண்ணம், என்று ஓர் செய்யுளைச் செய்தருளினர். அதனால் பிண்டத்திலும் ஸ்வாதிஷ்டான மணி பூர அநாஹதங்களில் பிரும்ம விஷ்ணு ருத்ரர்களை தியானித்து அவர்கிரந்திகளை பேதித்து மேல் ஆக்ஞாஸ்தானத்தில் ஸ்ரீ குருமஹேசுவரமூர்த்தியைக் கண்டு அவனது திருவருளாலவனது ஐக்கியம் பெற்ற சேதனுக்கு மீண்டும் சரீரத்தில் ஒருக்கால் பஹிர்முகவிர்த்தி உண்டானாலும், அஃது அகாரிய காரியென்றும் அவனது திவ்ய சைதன்யவிலாசத்துக் கொன்றும் குறைவில்லையென்றும் தெளிவாகப் புலப்படுகிறது. அஃதையே நிர்வாணமென்றுமென்பர். அஃதை நிர்வாணமேவேண்டுமெனமாற்றிக்கொண்டுவிடையருது அதனைச்சிந்தித்தலே அவ்விதமகாசித்திக்கேதுவாம். மற்றவைமுன்போல்.

அவதரணிகை

அத்தகைய பெருமை யண்டபிண்டங்களில் அவிமுக்தத்துக்குக்கிடைத்த ஏதுவைக்குறிக்கின்றார்.

அத்ர ஹி ஜந்தோ: ப்ராணேஷூத்க்ரமமாணேஷு
ருத்ரஸ்தாரகம் ப்ரஹ்ம வ்யாசஷ்டே — யே
நாஸாவம்ருதீ பூத்வா மோக்ஷீ பவதி || என்று

(இ—ள்) இங்கு ஜந்துக்களுக்குப் பிராணன் வெளிப்படும் பொழுது ருத்திரன் தாரகப் பிரம்மோபதேசம் செய்வார் அதனால் அச்செந்து அமிர்தமாய் மோட்சத்தைப்பெறும்.

(வி—ரை) இங்கு என்றது அண்டபிண்டா விமுக்தங்களை க்குறித்தது. இதனால் அண்டத்தில் மேல்கண்டஸ்தானத்தில் மரிப்பவர்க்கும் பிண்டத்தில் சுழிமுனை வழியாய் மேற்கண்ட விடத்தில் மனோலயமானவாவைச் செலுத்தினவர்களும் மேல்குறிக்கும்பாக்கியம் கிட்டுமென்பதைக் குறித்தது. ஐந்து என்றெடுத்தமையால் எவ்விதமான வர்ணாச்சிரமாதிகளாலுண்டாகுமதிகார விசேடங்கள் இங்கவாவப் பட்டதாம், பிண்டத்திலும் தாரகமென்ற ராஜயோகத்தைக் கொண்டு ஆக்ஞாஸ்தானத்தில் சிவகுருசாக்ஷாத்காரம் பெற்றோர் எவ்வருணத்தவராயினும் எவ்வாச்சிரமிகளாயினும், ஜடபரத, இந்தமாதிகளைப் போல் எத்திருவுருவைப் பெற்றவராயினும் அவருக்கு பிராரப்தவிசேஷத்தாற்றோன்றியஅச்சரீரத்தின்கண்ணே அவர்களுக்குமீட்சியில்லாப்பேரானந்தவீடுகூடுமென்பதிதன்கருத்து. அதற்கு எச்சாதனங்களில்லாவிடினும், வைராக்கியமென்ற சாதனமொன்றுமட்டும் இன்றியமையாதாதலின், அதனைமட்டும் குறித்தற்காக பிராணங்கள் போகும்பொழுது என்று. தம்வலிகுன்றாது பிராணங்கள் சரீரத்தில் சஞ்சரிக்குங்கால் காமாதி பகைவர் அறுவர்களைச் சிக்குண்டு ஆன்மாசரீராபிமானத்தைவிட்டொழியானாகவே அவனுக்கு வைராக்கியம்இன்றாம் மரணத்தின் பிறகும் கேட்டல் முதலியவற்றுக்கேற்றபுலன்களும் அபிமானிக்கற்குத் தூலசரீரமும் சேராமையின் அன்று சாதனங்கள் சேராது. ஆயின் ரோகம் முதலியவற்றால் தம்மால் வெகுகாலம் அபிமானிக்கப்பட்ட சரீரத்தை விட்டு அகன்றிட நேருங்கால் தமக்கு அதை விடுவதற்கு விருப்பமில்லாமற் போனபோதிலும், அரும்பாடுபட்டு அபிமானத்துடன் கட்டிய தமதில்லத்தை நாற்புறம் தீக்கவர்ந்தபொழுது விடுவதுபோலிங்கும் விடும்படிநேருகின்றது, ஆயின் அச்சமயம் எவ்விதவிருப்பமிருப்பினும் அது பயன்படாமையால் வைராக்கியமுள்ளவன் விடுவதுபோலிவனும் சரீரத்திலபிமானத்தை விட்டே தீரவேண்டும். அவன் இன்பத்துடன் விடுவான் இவன் துன்பத்துடன் விடுவானாயினும் எவ்வழியிலுமான்மகோடிகளை அனுக்கிரகிக்கவேண்டியவவ்வியாஜகருணாபரிபூர்ணனாகிய ஸ்ரீபரமேச்சுரன் வைராக்கியப்போலியான வதை ஓர் சிறு சாதனமாகவேற்று ஆட்கொள்ளுகிறானென்பது அவனது திருவருட்செல்வத்துமேளார்சிறிதேயாம். ஒருவன் அன்புடன் பால்

அருந்தினும், குழந்தை தாயடிகொண்டு பாலருந்தினும், இருவரும் இன்பத்துடனும் துன்பத்துடனுமேற்கும் பாலிருவருக்கும் பயமே தருவது போலவிம்மரணகாலவைராக்கியமும் வைராக்கியத்தோடியிற் சேர்ந்த ஓர்வகை யதிகாரிக்குப்பயன் தருவதேயாம். அற்றேல் எல்லாப்பாவிகட்குங்காசி மரணத்தாற்பரமசிவோபதேச பாக்கியங்கிட்டி வீடுகூடுமாயின், பாவங்களுக்கு பிராயச்சித்தங்களையும், நரகாதிவனுபவங்களையும் நிரூபித்த சாஸ்திரங்கள் முற்றும் பிரமாணங்களாகாவோவெனின், இங்ஙனம் சங்கை செயற்க. பல்கோடிப்பவங்களில் நாடோறுஞ்செய்த நற்கருமத்தின் பயனையன்றோ, அண்டத்துட்காசிவாசமும், அதனிடத்தே மங்களமரணமும், அனேககோடிபவங்களில் நாடோறுமப்பிய சித்தவர்ணாச்சிர தர்மங்களுடன் கூடிய மகாராஜயோக நிட்டையின் பயனன்றோ பிண்டாவிமுக்தோபாசனமும் அங்கேலயமும். அற்றேல் கொடுங்கனவாயினுமாகுக. காசியிற் கண்ணேயிறக்கும் காமுகர் கள்வர் குடியர் கொலையாளிகளுக்கும் மறையவர், பறையர், மற்றவர்க்கும் ஒருவகையேமுக்தியெனின், அவ்விடத்தே அவர்செய்த கொடுஞ்செயல்களெலாம் பயனற்றொழியுமேயெனின், இச்சங்கையும் நியாமையின் செயலேயாம். என்னையெனின் அத்தகையபாபிகளுக்கு அங்கு பைரவ குலாக்ரயாதனை யுண்டென சாத்திரங்கள் நிரூபித்தன வென்க. அற்றேல். அரன் திருவருள் பெற்றவர்க்காசிமரண பாக்கியவான்களுக்கும் மீண்டுந் துயருண்டோவெனின் எவ்வினையும் அதன்பயனைத் தராதொழியாதாகலின் அவ்வினைக்கேற்ற பயனுண்டேயாமென்க. அவிமுக்தமரணம்பெற்றோர்க்கு வைரவகுலாக்ரயாதனையின்பிறகே பரமேச்சுரசதுபதேசதற்பயனாய சொரூபசாட்சாத்காரமும் லிங்கதேகபங்கமுமுண்டாமாகலின்மற்றய இடங்களிற் பெறும் மரணத்திலும் காசிமரணம் மிகச்சிறந்ததாமெனப்பட்டது. ஆலாலத்தாலமங்கோலமாயினவமரர்க்கும் அமுதம்கிடைத்த ஆனந்தம் மிக்கப்பெருகுமன்றிமீண்டுமாலாலத்தைக்கண்டஞ்சாவண்ணம் மனத்திடமுண்டாயதுபோலென்க. ஆயின் ஸ்தூலத்திலபிமானத்தை விட்டுச் சூக்குமத்திற் பரசிவோபதேசத்தைப் பெற்று, அதுபயன்படுவதற்கு முன்னரேபைரவயாதனாதிகளை யனுபவித்துப் பிறகு அச்சதுபதேச பலனை மீளாத பரமானந்தத்தைப்பெறுவானென்பது முறை இத

ஞல் எந்தச்சாஸ்திரங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் விரோதம்
யாதுமில்லை. இச்சரீரத்திலேயே வைராக்கியாதி சாதனங்கள் நி
றையப் பெற்றவனுக்கு ஸ்ரீபரமேசுவரசதுபதேசம் வைராக்யா
தனை முதலிய இடையூறின்றி சீக்கிரத்திற் பயன்தரும். அங்ஙு
னம் பெறுதாற்கும் அதற்கெதிர்மறையானை. மகாபாதகங்கணிறை
தார்க்கும் தாரதம்மியம்போல் காலம் செல்லபபின்பே யவ்வுபதே
சம் பயன்படும். இவ்வளவே வேற்றுமையுளது. இவ்விஷயம்
காசீ மிருதிமோட்ச நிர்ணயத்தில் ஸ்ரீ சுரேசுவராசாரியவர்களால்
விரிவாய் நிரூபிக்கப்பட்டது. அங்குள்ள முடிந்த கருத்து- நல்
லதோர் விதை நீர்வளம்நிலவளம் நிறைந்து கூடியவிடத்து விதை
க்கப்படினது உடனே முளைப்பதும், உசிதகாலத்திற் பயன்படுவ
தும் பிரத்தியட்சம்- மற்றுபோதுமான நீரும் நிலவளமும் இல்லா
தவிடம் அதேநல்விதை சிறிதுகாலம் சென்றேமுளைப்பதும் பயன்பு
டுவதுமாகும்- மேல் நீரேயன்றிமுற்றும் காய்ந்துள்ள நிலத்தின் கு
ணோர் நல்விதை வீழ்ந்தா லந்நிலத்தின் கடினத்தன்மை
களைத்துலைக்கக் கண்டி வெட்டியுமுழுதும் கட்டியடித்தும் குப்பை
யைச்சேர்த்தும்மேடுபள்ளம் நிறைவியும் நற்றண்ணீர்பாய்ச்சியும்
பல செய்கைகள் செய்தபிறகே அவ்விதைமுளைக்கும். அன்றிநல்
விதைவிதைப்பவன் தான்விதையைவிதைப்பதற்கு முன்னரேஅந்
நிலத்தில் மறைந்துகிடைக்கும் பலவிபரீதவிதைகளும், முளைத்
துத்தழைத்து நெற்பயிரை யழிக்கமுயலுமால் அவைகளை வெட்டி
த்துக்களைந்தபிறகே அந்நெற்பயிரை நற்பயனுளதாக்குவதுபோ
லீண்டும் ஸ்ரீபரமேச்சுர சதுபதேசநல்விதையேற்ற ஆன்மாவிடத்
துவாசனமயமாய் நிற்கும் பலவிதைகள் முளைத்து அவைகளை பை
ரவன் சூலமுகத்தாற்களைந்தெரிந்தாலன்றி அத்திவ்யோபதேச நல்
விதைப்பயன் படுவதில்லையாம், என்பதே. ஆகபரமசிவனது திவ்
யோபதேசம் அவ்விமுக்தோபாசகர்களுக்கே சுலபமாய்க்கிடை
ப்பதே அவிமுக்தத்திற்களவிலாப்பெருமையாம், என்பதேயாயிற்
று. அத்தகையவுபதேசம்யாது? அவ்வுபதேசத்தைச்செய்பவன்
தான் யாவன்? என்ற வினவையெதிர் நோக்கி ஆசிரியன் பெரு
மையும் உபதேசிக்கப்படும். மந்திரத்தின் பெருமையும் அமைக்
கின்றார் ருத்திரனென்பதாதியால். ருத்திரன் = சம்மாரத்துயா

ங்களைத் துலைப்பவன் (ரோகவிஸம்ஸாரஜம் து:கம் தத்த்ராவயதி
யஸ்ஸ ருத்ர: ஸ ஏவ ருத்ர இதி ச்ருதே:|| ருத் என்பது சம்சாரத்
தில் ஆன்மாக்களைக்கட்டும் வித்தை; அதனை எவன் பகரிப்பான். அ
வனே ருத்திரனெனப்படுவான். அல்லது 'ருத்திரன்,ருத் என்பது
சப்தமயப்பிரபஞ்சம், அதனைத்தன் வசப்படுத்தி க்கொண்டவன்;
அதாவது சவர்சப்தங்களாலும் பிரதிபாதிக்கப்படுகிறான். அல்ல
து'ருத்திரன்' ருத்=பிரம்மவித்தை, அதனையுபதேசிப்பவன்; ஆ
தாசாரியசரீரத்தை யதிட்டித்தும் நேரிலும் தத்வோபதேசஞ் செ
ய்பவன்; அல்லது'ருத்திரன்' =சப்தமயபிரபஞ்சத்தை யொழிப்
பவன், மௌனசமாதியை உபதேசிப்பவன் என்பதுகருத்து. அல்
லது'ருத்திரன்'=ருத்என்றபிரம்மவித்தையினால் ஜீவனிடத்தமை
ந்த அஞ்ஞானவித்தையை த்ராவணம் செய்பவன், கரையச்செய்
பவன், நிவிர்த்திப்பவன். அல்லது 'ருத்திரன்' = சம்ஹாரகால
த்தில் சமஸ்தப்பிராணிகளையும் கதறச்செய்பவன். அல்லது 'ருத்
திரன்=பிரம்மதேவமுகாவிர்ப்பாவலீலையிலும், தேவதைகளிடத்
து பொன்னைக்கவர்ந்தலீலையிலும் அழுகையையபினயித்தவன்.
அல்லது'ருத்திரன்' பிரதிபந்தகிய ரோதிகாசக்தியைத் துலைப்
வன். அல்லது'ருத்திரன்' எல்லாநற் ப்ரவிருத்திகளையும் தடுக்கும்
தமோகுணத்தைத்தன்வசப்படுத்தினவர். அல்லது'ருத்திரன்'உ
லகத்திலுள்ள ஆன்மாக்களிடத்தமைந்த 'ருத்' என்ற அஞ்ஞா
னத்தைநோக்கி தான் துயருறுபவன். பிறர்துயரமேற்காமையெ
ன்ற கருணைக்கு நிதியாயுள்ளவனென்றகருத்து. அல்லதுருத்
திரன்' =ருத் என்பதாவரணம் அதனைநிவிர்த்திப்பவன். அல்ல
து'ருத்திரன்' =சர்வஜகத்பயங்கரன், சர்வேசுவரனுதலால் என்
பதாதி பலபொருள்கள் ஸ்ரீமாதவாசாரிய ஸ்ரீமஹீதராசாரிய ஸ்ரீ
பாஸ்கராசாரியர் முதலியோர்களால் வேத பாஷ்யங்களிலும் பு
ராணங்களிலும் பாரதாதிகளிலும் விரிந்து கிடைக்கின்றன ஆ
தலாற்றான் ஸ்ரீபோதாயனமுனிவரும் தமது குருவை சிவனென்
றுபாவித்துப் பூஜிக்கவேண்டுமென்றனர். அதுகொண்டேஅமர்
க்களத்தமைந்த அர்ச்சுனன் அம்புலிசூடிப்பிரான் திருவாராதனை
யைத் தமக்குக்கீதோபதேசஞ் செய்தபரமாசாரியரான கண்ண
பிரான் திருமேனியிற்றானே செய்துமுடித்தான். என்பது ஸ்ரீம

காபாரதத்தில் ஸ்பஷ்டமாயுளது. மேற்கண்டசர்வக்ஞத்வம்வாத்சலியம் முதலிய அற்புதகுணமுள்ள ஸ்ரீ பரமேச்சுரனே வேறுபிராகிருதத் திருமேனிகளையெடுக்காது தமதப்பிராகிருத திவ்ய விக்கிரகத்துடன் பிரமவித்யா தேவியார் தமதருட்டிருமேனியில் ஓர்பாகத்தில் துலங்கிட அச்செந்துக்குப் பிரத்தியட்சமாய்த்தமது திருக்கரங்களாலச்செந்துவின்றலையைத்தமது திருத்தொடைமேலேற்றி அதன்வலதுதிருச்செவியில்மெள்ள ஸ்ரீமகாதாரக மகாமந்திரோபதேசஞ் செய்தருளி அவித்யா நிவிர்த்தி செய்தருளுவானென்பதாதிதாரகவித்யாவிதியின்பூகார்த்தவாதமாம். இஃதுகாசீகண்டம் முதலிய புராணபாகங்களில் விரிந்துகிடப்பது. இவ்வளவாலாசிரியர் பெருமை கூறப்பட்டதாயினும் அதன்மட்டோடு அவாநிலைபெறாமையாதாகையால் அவ்வித்தையின் பெருமையையும் 'தாரக' என்றதாதியால் குறிக்கின்றார். 'தாரகம்' என்பது பிரணவமே. இதனை பஞ்சாக்ஷரமென்பாருஞ் சிலருளர், பிரணவத்தைத் தாரகமென்று சொல்லுது சர்வவேதாந்தப்பிரசித்தம், '[illegible]' '[illegible]' இனி தாரமெனப்படுவதெதனால்? எதனுச்சரித்தமாத்திரையில் கர்ப்பம், ஜன்மம், ஜரை, மரணம் இவைகளாகிய சம்சாரமகாபயத்தினின்று தாரணஞ்செய்விக்கும். ஆதலால் தாரமெனப்படும். என்று அதர்வசிரசும், '[illegible]' எல்லாத்துயரங்களினின்றும் தாரணஞ்செய்விப்பதால் தாரமெனப்படும், என்று அதற்வசிகோபநிடதமும், '[illegible]' என்று முன் அதர்வசிரசு கூறியவாறே அத்வயதாரகோபநிடதமும், இவ்வுபநிடதத்திற் கண்டபடி பிருகஸ்பதி யாக்ஞவல்கிய சம்வாதத்தை முற்றுங்காட்டி '[illegible]

கர்ப்பஜந்மஜராமரண ஸம்ஸாரமஹத்பயாத் ஸம்
தாரயதீதி தஸ்மாதுச்யதே ஷடக்ஷரம் தாரகமிதி ய
ஏவம் வேத ஸ தாரகம் ப்ரஹ்ம ப்ரஹ்மணோ நித்யமதீதே –"
தாரகமாதலால் தாரகமெனப்படும் இதையே தாரகப் பிரமமெ
ன்று நீயறிந்திடுவாய், இதுவே உபாசிக்கப் பாலதா மென்றறிய
வேண்டும். கர்ப்பம் ஜன்மம் ஜரைமரணம் சம்சாரமென்னும்மகா
பயத்தினின்று தாரணஞ்செய்வித்தலால் இஃது தாரகமெனப்படும்
இஃது (ஷடக்ஷர) தாரகமெனப்படும், இத்தாரகப் பிரம்மத்
தை எந்தப்பிராமணன் நித்தியம் படிப்பான்; என்று ராமோத்த
ரதாபினீயோபநிடதமும், 'ப்ரணவஸ்தாரகஸ்ஸ ஏவம் வேத'
பிரணவம் தாரகம், அதனை யெவன் அறிவான்? என்று பசுபதப்
பிரமோபநிடதமும், 'ஜபந்தஸ்தாரகம் ப்ரணவமேவோச்சார நா
ஸிஷ்டந்தி' தாரகமான பிரணவத்தை ஜபித்துக்கொண்டு சந்தோ
ஷத்துடனிருக்கிறார்கள் என்று பஸ்மஜாபாலோபநிடதமும், இவ்
வுபநிடதத்தைப் போலவே பிருஹஸ்பதி, யாக்ஞவல்கிய சம்வாத
ரூபமாய் பிரவர்த்தித்து 'தாரகத்வாத் தாரோ பவதி' ததே
வ தாரகம் ப்ரஹ்ம த்வம் வித்தி, ததேவோபாஸிதவ்யம்' அது
வே தாரகமாதலால் தாரகமெனப்படும், அதை தாரகப்பிரமமாக
அறியவேண்டியது. அதையே உபாசிக்கவேண்டியது. என்று
தாரசாரோபநிடதமும், இன்னும் பலவுபநிடதங்களுமிவ்விதமே
தாரகம் பிரணவமென்று நிரூபித்தலாலும், மற்றும் நாராயணோப
நிடதம் பிரணவமே தாரகமென்று நிரூபித்தமையாலும், தெட்சிணா
மூர்த்தியுபநிடதம், ராமரகசியோபநிடதம் ராமதாபனீயோபநிட
தம் சன்னியாசோபநிடதம் அவதூதோபநிடதம் முதலிய எல்
லாவுபநிடதங்களும் தாரம் தாரகமென்று பிரணவத்தையே வழங்
குதலானும், பிரணவமே தாரகமெனப் பொருந்தும். அன்றியுஞ் ச
மஸ்த மந்திர சாஸ்திரங்களிலுந் தாரம் என்ற சொல்லுக்குப் பிர
ணவம் பொருளாவதேயன்றி மற்றேதும் பொருளாவதில்லை. அத
ர்வணவேதத்திற் சேர்ந்தகோபத பிராமணத்தில் பிரணவமே தார
கமென்பது நன்கு நிரூபிக்கப்பட்டது அன்றி ஸ்ரீ ருத்திராத்தியா
யத்திற்கு வ்யாக்யானம் செய்யவெழுந்த எல்லா பாஷியக்காரர் க

ளும் 'நதீஸாராய' என்றவிடத்துள்ள (தார) என்றசொல்
லுக்குப்பிரணவசொருபமானபரமாத்மாவென்றே பொருள்விரித்து
அதற்குவேண்டிய பிரமாணங்களையும் காட்டியிருக்கின்றார்கள்.
'ஸர்வேஷாமேவ ஜந்தூநாம் முமூர்ஷூணாம் மஹேச்வரஹ | ப்ரணவம்'
தாரகம் ப்ரூதே நாந்யத் க்வசந கஹ்யசித்
அவிமுக்தமென்ற மகாக்ஷேத்திரத்தில் சன்னிதானஞ் செய்யும்
பரமேச்சுவரன் (அங்கு மரிப்பவர்களின்) காதடியில் தாரக
மாகிய பிரணவத்தை யுபதேசிக்கின்றார். வேறெங்கு மவ்விதம்
இடையாது, என்று வசிஷ்டாதி ஸ்மிருதிகளும் பிரணவத்தையே
தாரகமென்றன புராணங்களோ இவ்விஷயத்திலளவிலடங்கா. சு
ருதி ஸ்மிருதி புராண இதிஹாசமந்திர சாத்திரங்களில் தார
மென்றசொல்லுக்கு பிரணவமன்றி மற்றேதும் பொருளாகவெடுக்
கப்படவில்லை. அற்றேல் ராமதாபனீயோபநிடதத்தில் கிம் தா
ரகம் கிம் தாரயதீதி ஸஹோவாச யாஜ்ஞவல்க்ய: தாரகம் தீ
ர்க்கானலம் பிந்து பூர்வகம் தீர்க்கானலம் புநர்மாயாம்
நமஸ்சந்த்ராய நம: ஏததாரகம், ஏததாரணஞ் செய்விக்கும் அந்தயாக்ஞவல்
க்கியர் மறுபடி கூறுகின்றார். தாரகமாவது ரகாரத்துடன் அகரநெடி
லைச்சேர்த்து பிந்துவும் சேர்ந்து பின்னர் அகரநெடிலேறிய அந்தரக
ரத்துடன்மாயனமவென்பதே, என்றும், முக்திகோபனிடதத்தில்
'யத்ர குத்ராபி வா காச்யாம் மரணே ஸமஹேச்வரஹ |
ஜந்தோர் தக்ஷிண கர்ணே து மத்தாரம் ஸமுபாதிசேத் |'
காசியிலெந்த விடத்திலாவது எந்தச்செந்துவேனும் மரித்தாலதன்
வலதுசெவியில் பரமசிவனானவர் என்னுடைய தாரகமந்திரத்தை
யுபதேசிக்கின்றார் என்றும, ராமோத்தரதாபினீயத்திலேயே
'ஸ்ரீராமஸ்ய மநும் காச்யாம் ஜஜாப வ்ருஷபத்வஜ: | மந்வந்
தர ஸஹஸ்ரைஸ்து ஜபஹோமார்ச்சநாதிபி:'
ஸ்ரீராமனுடைய மந்திரத்தைக் காசியில் பரமசிவன் ஜ
பித்தாரென்றுதொடங்கி நீர் என்மந்திரத்தையுபதேசித்தால
வன்முக்தனாவான் என்றுவிரிந்த உபாக்கியானமும்,ராமமந்திரத்
தைதாரகமென்றதுஉம். இவ்வுபனிடதங்கூறியவாறேட்ருஷமஞ்சி

யாக்ஞவல்கிய சம்வாதரூபமாய் காசிக்ஷேத்திரத்திலுபதேசிக்கப்படுவதும் மந்திரமேயென்ற தூஉம், ருத்திரமூர்த்தி அம்மந்திர சித்திபெறுவதற்கு பெரியதோர் தவஞ்செய்ததாக மகார்த்தவாதம் புகன்ற தூஉம், முற்றும்பதர்மொழிகளேயோ? மற்றுந் தாரசாரோபனிடதம் இவ்வுபனிடதமும் கூறியவாறு, யாக்ஞவல்கியசம்வாதரூபமாய்த்தோன்றி காசியிலுபதேசிக்கப்படும் மந்திரரகசியத்தை நிரூபித்து ப்ருஹஸ்பதிருவாச யாஜ்ஞவல்க்யம் கிம் தாரகம் கிம் தாரயதீதி ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய: | ஓம் நமோ நாராயணாயேதி தாரகம் சிதாத்மகமித்யுபாஸிதவ்யம் யாக்ஞவல்கியனை வினவினர். எது தாரகம் எதுதாரணஞ் செய்விக்குமென்று அந்தயாக்ஞவல்கியர்சொன்னார். ஓம் நமோ நாராயணாயவென்னுந்தாரகஞ்சிதாத்மகமானது அதுவேயுபதேசிக்கத்தக்கது என்று புகன்றதூஉம் அப்பிரமாணமாமோ வெனின்; அற்றன்று. வேதங்களில் ஓர்மாத்திரையேனும் அப்பிரமாணமெனச்சொல்வதே பெருந்தவறாயிருக்க வேதாந்தங்களிலெழுந்த விப்பெருஞ்சொற்றொடரையப் பிரமாணமென்போமில்லை. மற்றுஅஷ்டிபுருஷோபாஸ்தி முதலியன அவற்றையே பிரமமென புகழ்ந்ததும்போலும், தைத்திரியோபனிடதம் நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி வாயுவேயுனக்கு நமஸ்காரம். நீயே பிரத்தியட்சமானபிரமம்ஆகிறாய் என்றுவாயுவைபிரமமென்று துதித்தாற்போலவும், சாந்தோக்யோபனிடதம் வாமதேவ்யவித்தையில் எல்லாவிதபிரபஞ்சத்தையும் பிரமமென்றுபுகழ்ந்ததும், ஸ்வாராஜ நு ப்ரஹ்மாஸி அரசனே நீ பிராமணனாகிறாய் என்று ராஜசூயதீட்சிதனை பிராமணனென்று புகழ்ந்ததும், மற்றும்பலவசனங்கள் போலராமமந்திர அஷ்டாக்ஷர மந்திரங்களை பிரணவத்தினிய பெருமையேற்றி புகழ்ந்தனவேயாமென்க. அதனாற்றான் அவ்வுபநிடதங்களிலும் ராமதபனத்தில் அதேசொற்றொடர்தொடர்ந்து அகார: ப்ரதமாக்ஷரோ பவதி உகாரோ த்விதீயாக்ஷரோ பவதி மகாரஸ் த்ருதீயாக்ஷரோ பவதி அர்த்தமாத்ர: சதுர்த்தாக்ஷரோ பவதி | பிந்து: பஞ்சமாக்ஷரோ பவதி நாத:

ஷ்டாக்ஷரோ ஹவதி, தாரகத்வாத் தாரகோ ஹவதி, ததேவ
தாரகம் ப்ரஹ்மத்வம் வித்தி, ததேவோபாஸிதவ்யமிதி வி
ஜ்ஞேயம், கர்ப்பஜந்மஜராமரணஸம்ஸாரமஹத்பயாத் ஸந்தாரய
தீதி, தஸ்மாதுச்யதே அஷ்டாக்ஷரம் தாரகமிதி, ய ஏவம் த
தாரகம் ப்ரஹ்மம் ப்ராஹ்மணோ நித்யமதீதே அகரம்முதலெழுத்
தாம் உகரமிரண்டாமெழுத்தாம், மகரம், மூன்றாமெழுத்தாம்,
அர்த்தமாத்திரை நான்காவதெழுத்தாம், பிந்துஐந்தாமெழு
த்தாம் நாதமாறாமெழுத்தாம். தாரணஞ்செய்வதாதலால் தாரக
மெனப்படும். இதுவே தாரகப்பிரமமென்று நீயறிவாய். இ
துவேயுபாசிக்கப்பால தென்றறியற்பாலது. கர்ப்பம்ஜரை,ஜன்ம
ம், மரணம், ஸம்சாரமுதலிய பெருந்துயரத்தை விலக்குதலால்
இவ்வாறெழுத்துள்ளது தாரகமெனப்படும்.

எந்தப்பிராம்மணன் இந்தத் தாரகப்பிரம்மத்தை யத்தியயனஞ்செ
ய்வான் என்றும். தாரசாரத்திலும் :ஓமித்யேகாக்ஷரம் ப
ரம் ப்ரஹ்ம ததேவோபாஸிதவ்யம், ஸ ததேவாஷ்டாக்ஷ
ஷ்டாக்ஷரம் ஹவதி | ததேதஷ்டாத்மகோஷ்டதா ஹவதி
அகாரம் ப்ரதமாக்ஷரோ ஹவதி | உகாரோ த்விதீயாக்ஷ
ரோ ஹவதி | மகாரஸ்த்ருதீயாக்ஷரோ ஹவதி| பிந்துஸ்சது
ர்த்தியாக்ஷரோ ஹவதி நாதம் பஞ்சமாக்ஷரோ ஹவதி | கலா
ஷஷ்டாக்ஷரோ ஹவதி| கலாதீதா ஸப்தமாக்ஷரோ ஹவதி
தத்பரஸ்சாஷ்டமாக்ஷரோ ஹவதி தாரகத்வாத் தாரகோ ஹவ
தி "| ததேவ தாரகம் ப்ரஹ்மத்வம் வித்தி | ததேவோபாஸி
தவ்யம் | இம்மென்று அவ்வட்சரமே பரப்பிரமமாம் அதுவேயுபா
சிக்கப்பாலதாம். அதுவே சூக்குமாஷ்டாட்சரமாம், அதுவேஎண்
வகையாய் விரிக்கப்பட்டவஷ்டாட்சரமாகும். அகரம் முதலெழு
த்தாம். உகரமிரண்டாமெழுத்தாம். மகரமூன்றாமெழுத்தாம்.
பிந்துநான்காமெழுத்தாம். நாதமைந்தாமெழுத்தாம். கலையாறா
மெழுத்தாம். கலாதீதையேழாமெழுத்தாம், அதனப்புறமுள்ள
தெட்டாமெழுத்து. தாரணஞ்செய்வதினால் தாரகமெனப்படும்
அத்தாரகமே பரப்பிரமமென்றறி. அதுவேயுபாசிக்கற்பாலது. என்

றும் பிரணவமே தாரகமென்றுந் நிரூபிக்கப்பட்டதாம். முதலில்
ராமமந்திரத்தையும் அஷ்டாக்ஷரத்தையும் புகழ்ந்து தாரகமென்
றதும், பஞ்சகோசங்களை ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரம
மென்றும் நிரூபித்து, ஒன்றன்மேலொன்றாய்ச் சிறப்பித்து இறுதி
யில் ஆனந்தமே பிரம்மசொரூபமென்று தைத்திரியங்கூறியவாறு
இவ்வுபநிடதமுங் கூறியதாமென்க. வேதங்களில் பல அர்த்தவா
தங்களுடன் ஒவ்வொருசொற்களுக்கு ஒவ்வொருபொருள் குறிக்க
ப்பட்டால்அது எவ்விடத்தும் அப்பொருளுளதாகவே ஏற்கப்பட
மாட்டாது. 'வ்ருஷஸ' என்றசொல்லுக்கு எங்குமுள்ளபொரு
ள் மாகேந்திர ஸ்தோத்திரமென்ற ஓர்வகை சாமம். அதற்கு ரத
ந்தரமென்ற சாமத்தைப்பொருளாகக் குறித்ததோர் பெரிய அ
ர்த்தவாதமுண்டு. அப்படியே ருத்திரன் என்றசொல்லுக்கு எங்
கும் பிரசித்தமான பொருள் உமாபதி; ஓரிடத்தில் அக்னி யதன்
பொருள் என்றதற்கு ஓர் பெரிய அர்த்தவாதமுண்டு ஜ்வரம் அத
ன்பொருளென்பதும் ஓர்பிரயோகத்தாலறியப்படுகிறது- ஆரண்ய
கத்தில் யஞ்ஞதேவதை யிடத்துமச் சொல்லுபயோகிக்கபபடுகிறது
(விருத்ரஹா) என்றசொல்லுக்கு தேவேந்திரன் பொருள். இதற்கு
அக்னியைப்பொருளாக்கி ஓர் மந்திரமும் அர்த்தவாதமுமுண்டு
(பிரம்ம) என்றசொல்லுக்குஎங்கும் பிரமம் பொருள். அவ்வொன்
றன்பாற் சொல்லை பிராமணனிடத்தும் வேதம் விநியோகித்தது
[அதிதி) என்றசொல்லுக்கு கசியபன் மனைவியாகிய தேவதையி
ன்தாய் பொருள். வேதமோரிடத்தில் பூமியையும், ஓரிடத்தில்
ஆவினத்தையு மதற்குப்பொருளாக வழங்கியது. வஸந்தம் (கர்
மம்) என்றது எங்கும் குட்டையும் வேனிற்பருவத்தையுங் குறிக்
கும, வேதத்தில் யஞ்யதேவதையின் சிரஸ்ஸாகப் புகழப்பட்டது
விஸ்வஸ்க்கு அச்சொல்லையுபயோகித்ததோர் பெரிய அர்த்தவாத
முண்டு- இங்ஙனம் அநேகஞ்சொற்களை மந்திரங்களில் பிரகர
ணங்களுக்கேற்றவாறு பொருட்படுத்துமர்த்தவாதங்கள் பலவுள.
அவற்றால் அவ்வர்த்தவாதங்களமைந்த பிரகரணங்களைத் தவிர்த்து
மற்றய விடங்களிலவ்வச்சொற்களுக்கு ஆரணவழக்குமான்றோர்
வழக்கும் முரண்படப்பொருளுரைத்தல் மரபாகாது. அர்த்தவாதங்
களனைத்தும், விதிகளைப் புகழ்வனவாய் தம்செம்பொருள்களிற்
றாம் நிலைபெறாது. தெய்வைகைப்பொருளாய்ப் புகழ்ச்சி யொன்றை
யேகுறிக்குமென்றனர் மீமாஞ்சகர். ஆயின், ராமோத்தரதாபநீ

யத்திலும் தாரசாரத்திலும் தம்மைத் தாரகம் யாதென வினவிய பரத்வாஜருக்கு ஓரிடத்து ராமஷடக்ஷரம் தாரகமென்றும், மற்றோரிடத்து அஷ்டாக்ஷரம் தாரகமென்றுஞ் சொன்னதும் பொருத்தமுடையதேயாம், எதனாலெனின் தமது தந்தையாகிய வருணனை பிரமம் யாதென வினவிய பிருகுவுக்கு அவர் முதலில் அன்னம் பிராணன் முதலியவற்றை பிரம்மமென்றுபதேசித்தாற்போலாமென்க. அங்ஙனமில்வழி ராமமந்திரமே தாரகமாயின் அஷ்டாக்ஷரம் தாரகமென்றதூஉம், அஷ்டாக்ஷரமே தாரகமாயின் ராமமந்திரம் தாரகமென்றதூஉம், ஒன்றுடனொன்று முரணுமன்றோ. இனிச கானப்பிரமாணங்களிற் கிடைத்தபொருளெலாம் அச்சொற்குளவேயெனினும், அவைகளை அவ்வப்பிரகரணங்களில் அவற்றைவிவஸ்தை செய்யவேண்டுகை நம்மரபேயாம். பங்கயமென்ற சொல்லுக்குக் காரணவிடுகுறியாகுங்கால் தாமரை பொருளும் ஒரேவழி ஆம்பல் முதலியவற்றும் காரணப்பெயராயும் ஸ்தலகமலமென்ற தரையிலுண்டாம் தாமரையின்கண் இடுகுறிப்பெயராவதுபோல் தாரகமென்றசொல் பிரணவத்தின்கண் காரணவிடுகுறியும் சில மந்திரங்களில் காரணப்பெயருமாய் அமையுமெனக்கொள்க. ஆதலாற்றான் பஸ்மஜாபாலோபநிடதத்தில், [illegible] ॥ தாரகமாகிய சைவமகாமந்திரத்தை யுபதேசிப்பேன், அங்கு முக்திக்காக உபதேசிக்கப்படுவது சைவமந்திரமாகிய பஞ்சாட்சர

மே இப்பரமமாகிய சைவ பஞ்சாட்சரமே தாரகமாம் ஓமென்று முதலிற்சொல்லுக, பிறகு நமவென்க. மேல்மகாதே வாவென்று ஐந்தெழுத்தைச்சொல்லுக. இதிலும் மேலானமகா மந்திரமாயதாரகமந்திரமில்லை. இப்பஞ்சாட்சரமே 'தாரகம்' இ ச்சைவமந்திரமென்பது யாது? இத்தாரகமாகிய சைவமந்திரமே உபதேசிக்கப்படுகின்றது. காசியில் இச்சைவமந்திரமே சைவர்களா னஜீவர்களுக்கு உபதேசிக்கப்பட்டு அவர்களை முக்திக்குய்ப்பிக் கின்றது. இதுவே பிரம்மோபதேசமாம். "பிரமமாகிய சோமனும் நானே வேதங்களுக்குப்பேரணியான சைவபஞ்சாக்ஷரமாகிய தார கமகாமந்திரத்தை பிரணவத்துடன் ஜபித்துக்கொண்டு சந்தோஷம டைகின்றார்கள் என்றுபல வசனங்களால் ஸ்ரீ சைவபஞ்சாக்ஷர சைவாஷ்டாக்ஷரங்களே ஸ்பஷ்டமாய் தாரகமென்று துணிந் தோதப்பட்டன. ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் அம்மந்திரத்தையுப தேசிக்கும் ஸ்ரீருத்திரமூர்த்தியின் வாக்கியங்களே யவைகளா தலால், ராமமந்திர வைஷ்ணவாஷ்டாக்ஷர மந்திரங்களை தார கமெனக்குறித்த யாக்ஞவல்கிய வசனத்திலும் அவைபிராமண ங்களுட் சிறந்தன வென்பது சொல்லாதே புலப்படுமென்றே.

மேற்கண்ட அர்த்தவாதங்களைப்போன்ற பல அர்த்தவாதங்க ளாயினும், சைவாஷ்டாக்ஷர, சைவபஞ்சாக்ஷர ராமஷடட்சர வைஷ்ணவாஷ்டாட்சரங்களை வேறு எவ்விடத்தேனும் இச்சொ ல்லுக்குப் பொருளாக்காமேயன்றி இங்கு தனித்தெடுத்தோ தப்பட்ட இத்தாரகச்சொல்லுக்கு பிரணவமன்றி மற்றெப்பொ ருளும் ஒவ்வாதாமென்பது துணிபாம். அற்றேல்' தாரம்;தா ரகமென்ற இரண்டு சொற்களுள் தாரகமென்ற சொல் ராம மந்திராதிகளையும்.தாரமென்ற சொல் பிரணவத்தையும் நிரூபிப் பதாமெனக்கொண்டு விரோதபரிகாரஞ் செய்யற்பாலதன்றோ வெனின், அற்றன்று' தாரம், தாரகம்; தாரகப்பிரமமென்ற சொற்களுக்கு பொருளொன்றாகக் கொள்வது அதர்வசிரோ பநிடதம் முதலியவற்றின் கருத்தேயன்றி மற்றவை பொருந்தா தனவாம் ஆதலாற்றான் தாரகமென்றே பிரணவத்தைஉபநிட தங்களெல்லாம் வழங்கிவருகின்றன. ராமோத்தர தாபநீயமும் தாரசாரமும் அங்ஙனமே வழங்கியது. தாரகம் பிரம்மம் என்ற இருசொற்களும் சேர்ந்துவருவது பிரணவத்திடத்தேயாமென்ப

யத்திலும் தாரசாரத்திலும் தம்மைத் தாரகம் யாதென வினவிய பரத்வாஜருக்கு ஓரிடத்து ராமஷடக்ஷரம் தாரகமென்றும், மற்றோரிடத்து அஷ்டாக்ஷரம் தாரகமென்று சொன்னதும் பொருத்தமுடையதேயாம், எதனாலெனின் தமது தந்தையாகிய வருணனை பிரமம் யாதென வினவிய பிருகுவுக்கு அவர் முதலில அன்னம் பிராணன் முதலியவற்றை பிரமமென்றுபதேசித்தாற்போலாமென்க. அங்ஙனமில்வழி ராமமந்திரமே தாரகமாயின் அஷ்டாக்ஷரம் தாரகமென்றதூஉம், அஷ்டாக்ஷரமே தாரகமாயின் ராமமந்திரம் தாரகமென்றதூஉம், ஒன்றுடனொன்று முறணுமன்றோ. இனிச கானப்பிரமாணங்களிற் கிடைத்தபொருளெலாம் அச்சொற்குளவேயெனினும், அவைகளை அவ்வப்பிரகரணங்களில் அவற்றைவிவஸ்தை செய்யவேண்டுகை தம்மரபேயாம். பங்கயமென்ற சொல்லுக்கு காரணவிடுகுறியாகுங்கால் தாமரை பொருளும் ஒரேவழி ஆம்பல் முதலியவற்றும் காரணப்பெயராயும் ஸ்தலகமலமென்ற தரையிலுண்டாம் தாமரையின்கண் இடுகுறிப்பெயராவதுபோல் தாரகமென்றசொல் பிரணவத்தின்கண் காரண விடுகுறியும் சில மந்திரங்களில் காரணப்பெயருமாய் அமையுமெனக்கொள்க. ஆதலாற்றான் பஸ்மஜாபாலோபநிடதத்தில், தாரகம் சைவம் [illegible] || தாரகமாகிய சைவமஹாமந்திரத்தை யுபதேசிப்பேன், அங்குமுக்திக்காக உபதேசிக்கப்படுவது சைவமந்திரமாகிய பஞ்சாட்சர

மே இப்பரமமாகிய சைவ பஞ்சாட்சரமே தாரகமாம்
ஓமென்று முதலிற்சொல்லுக, பிறகுநமவென்க. மேல்மகாதே
வாவென்று ஐந்தெழுத்தைச்சொல்லுக. இதிலும மேலானமகா
மந்திரமாயதாரகமந்திரமில்லை. இப்பஞ்சாட்சரமே தாரகம் இ
ச்சைவமந்திரமென்பது யாது? இத்தாரகமாகிய சைவமந்திரமே
உபதேசிக்கப்படுகின்றது. காசியில்இச்சைவமந்திரமேசைவர்களா
னஜீவர்களுக்கு உபதேசிக்கப்பட்டு அவர்களை முக்திக்குய்பிக்
கின்றது. இதுவே பிரம்மோபதேசமாம். பிரமமாகிய சோமனும்
தானே வேதங்களுக்குப்பேரணியான சைவபஞ்சாக்ஷரமாகிய தார
கமகாமந்திரத்தை பிரணவத்துடன்ஜபித்துக்கொண்டு சந்தோஷம
டைகின்றார்கள் என்றுபலவசனங்களால் ஸ்ரீ சைவபஞ்சாக்ஷர
சைவாஷ்டாக்ஷரங்களே ஸ்பஷ்டமாய் தாரகமென்று துணிந்
தோதப்பட்டன. ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் அம்மந்திரத்தையுப
தேசிக்கும் ஸ்ரீருத்திரமூர்த்தியின் வாக்கியங்களே யவைகளா
தலால், ராமமந்திர வைஷ்ணவாஷ்டாக்ஷர மந்திரங்களை தார
கமெனக்குறித்த யாக்ஞவல்கிய வசனத்திலும் அவைபிராமண
ங்களுட் சிறந்தன வென்பது சொல்லாதே புலப்படுமன்றோ.

மேற்கண்ட அர்த்தவாதங்களைப்போன்றே பல அர்த்தவாதங்க
ளாயினும், சைவாஷ்டாக்ஷர, சைவபஞ்சாக்ஷர ராமஷடட்சர
வைஷ்ணவாஷ்டாட்சரங்களை வேறு எவ்விடத்தேனும் இச்சொ
ல்லுக்குப் பொருளாக்கலாமேயன்றி இங்கு தனித்தெடுத்தோ
தப்பட்ட இத்தாரகச்சொல்லுக்கு பிரணவமன்றி மற்றெப்பொ
ருளும் ஒவ்வாதாமென்பது துணிபாம். அற்றேல்' தாரம்,தா
ரகமென்ற இரண்டு சொற்களுள் தாரகமென்ற சொல் ராம
மந்திராதிகளையும், தாரமென்ற சொல் பிரணவத்தையும் நிரூபிப்
பதாமெனக்கொண்டு விரோதபரிகாரஞ் செய்யற்பாலதன்றோ
வெனின், அற்றன்று' தாரம், தாரகம்; தாரகப்பிரமமென்ற
சொற்களுக்கு பொருளொன்றாகக் கொள்வது அதர்வசிரோ
பநிடதம் முதலியவற்றின் கருத்தேயன்றி மற்றவை பொருந்தா
தனவாம் ஆகலாற்றான் தாரகமென்றே பிரணவத்தைஉபநிட
தங்களெல்லாம் வழங்கிவருகின்றன. ராமோத்தர தாபநீயமும்
தாரசாரமும்அங்ஙனமே வழங்கியது. தாரகம் பிரமம் என்ற
இருசொற்களும் சேர்ந்துவருவது பிரணவத்திடத்தேயாமென்ப

து எல்லாவைத்தியர்களுக்கும் ஒப்பமுடிந்தவாய்மையாம்.

இனி பஞ்சாட்சரமும் தாரகமென்றவர் கொள்
கையைச்சிறிதுநிரூபிப்பாம். மேற்கண்ட பஸ்மஜாபாலோபனிஷத்
துவசனங்களால் ஸ்ரீபஞ்சாட்சரமேதாரகமெனப்படுதலாலும், அவ்
வசனங்கள் ஸ்ரீகாசியில் தாரகோபதேசஞ்செய்யும் பரமசிவனது
சுயவசனங்களாதாலானும், இஜ்ஜாபாலோபநிடதவசனத்துக்குஜா
பாலோபநிடதவசனங்கொண்டே பொருட்படுத்துவது ஞாயமாத
லானும், இவ்வுபநிடதத்தின் ஆறாவது கண்டத்தில் குறிப்பிடப்பட்
டபரமஹம்ஸர்களுக்கு சன்னியாசோபனிடதம்முதலிய உபனிட
தங்கள் திருநீற்றுப்புண்டரத்தை விதித்தலானும், அத்திருநீற்றை
விரிக்கவெழுந்த பஸ்மஜாபாலோபநிடதம் இதற்கு பிராம்மணம்
போல் பொருள் விரிக்கும்வாக்கியசேஷமாகலாமாதலானும்; பஞ்
சஜாபாலோபனிடங்களுள்பிருகஜ்ஜாபாலம், பஸ்மஜாபாலம், ருத்தி
ராட்சஜாபாலம், ஜாபாலியாகிய நான்கும்பஸ்மருத்திராக்ஷபஞ்சா
ட்சர சிவலிங்க ஸ்ரீபில்வங்களாகிய பஞ்சவைதிக சாம்பவமுத்தி
ரைகளையே சிறப்பித்து வைதிகபாசுபத வித்யாசேஷங்களாய்ஸ்
பஷ்டமாய் நிற்றலானும், ஸ்ரீ காசியில் பஸ்மஜாபாலோபநிடதத்
தில் விஷ்ணு முதலிய சமஸ்ததேவதைகளும் சிவனை யுபாசிப்ப
தாக நிரூபித்திருப்பதாலும், அவர்கள் பஸ்மருத்திராட்சதாரணஞ்
செய்தவரெனக் காட்டப்பட்டமையானும், அதற்கு மாறாக, ருத்தி
ர மூர்த்தி நாராயணனை உபாசித்ததாகக் குறிக்கும் ராமபதனீ
ய வசனம் அசதர்த்தவாதமேயாதலானும் பிரணவம்முதலிய மற்
றதையும் தாரகமென் சித்தாந்தப் படுத்தாது, ஸ்ரீபஞ்சாக்ஷரத்
தையே தாரகமென்று அவ்வம்மந்திராசாரியரே உறுதி பயன்ற
மையானும், மற்றும், காசியினிடத்து என்மந்திரமுபதேசிக்கப்ப
டுகின்றது. ஆறெழுத்துள்ளதம்மந்திரம் என்று குறித்தொழியா
து ஸ்பஷ்டமாய் பஞ்சாட்சரமே யதன்பொருளாமென; அஃது
விரித்தமையானும், காசியில் உபதேசிக்கப்படுந்தாரகம் ப்ரண
வசகித பஞ்சாட்சரமேயாம். பிரணவத்தையதற்குப் பொருளா
ண பிரம்மத்தின் தாதாத்மியபத்தையேற்றி . ஓமிதி ஏகாக்ஷரம்
ப்ரஹ்ம, ஓமிதம் ஸர்வம், ஓமிதி ப்ரஹ்ம | ஸதாசிவோம் ;
= ஓமென்றவோரெழுத்தே பிரமம், ஓம் தத் என்பதுபிரமம்
ஓமென்பதே இஃதெலாம், சதாசிவனே பிரணவமென்றுபிரண
த்தை பிரமமெனவுச்சரித்த ஞாயந்தானும், அதர்வசிரசில்

மகாதேவன், மகேச்சுரன், ஈசானன் முதலிய சொற்களுடன் ஒருபொருட்கிளவிகளாய் ஓங்காரம், பிரணவம், தாரம், பிரும்மம் என்ற சொற்களை நிரூபித்தமையானும், அதர்வசிகையிலும், அப்பிரணவமே சிவநாமதேயமான மகாதேவனென்ற சொல்லுடன் பிரணவதார சப்தங்கள் ஒரு பொருளுள்ளனவாகக் குறிக்கப்பட்டமையானும், தைத்திரீய சங்கிதையிலும், காண்வ சங்கிதையிலும், சிவனைத் தாரனென்றே தினமையாலும்; சிவதாதாத்மியம் பற்றியே தாரமென்றசொல் பிரணவத்திற்கு அமைவதாமென்பதுமேற்காட்டிய பிரமாணங்களாலுசிதமாதலானும், பிரணவத்தைத் தாரகமென்ற வாச்சியவாசகாபேத நியாயத்தானே பஞ்சாட்சரமும் தாரகனாகிய சிவனைக் குறித்தலாற்றாரகமாகலாம், என்பது. அஃதெங்ஙனமாயினுமாகுக. பிரணவம் தாரகமாவதெங்குந் நிலைத்ததேயாம். அதனைமறுக்க எவ்வாதியாலும் முடியாது. பஞ்சாட்சரத்தைத் தாரகமென்றதற்கு தாரகோபதேச பரமாசாரியன்றிருவாக்காய் பஸ்மஜாபாலமொன்றே பிரமாணம் போதுமானது. ஆக, யாம்பிரணவமதன் பொருளென்றதும், பஞ்சாட்சரம் அதன் பொருளெனச்சிலர் கூறிய தூஉம், பொருத்தமுடையதே யாமெனக். அற்றேல் பஸ்மஜாபாலோபநிடதத்தில் 'ശൈവസ്താരക: ശൈവശൈവസ്യാജീവസ്യ ഹി:, ശൈവോയമേവമന്ത്ര: ശാംഭവാ: പാശുപതാമഹാശൈവാ:, ശൈവം പഞ്ചാക്ഷരം, ശൈവമന്ത്രമുപദിശാമി, ശൈവോയംമന്ത്ര: പഞ്ചാക്ഷര:, പ്രേതകളേബരാൻ ശൈവാനാദീയ സ്വാംകേ സംനിവേശ്യ' = சைவந்தாரகம், சைவர்களான ஜீவர்களுக்கு, சைவமாகிய இம்மந்திரமே, சாம்பவர்பாசுபததர்மகாசைவர், சைவபஞ்சாட்சரத்தை, சைவமாகிய மந்திரத்தை யுபதேசிப்பேன்; சைவமான பஞ்சாட்சர மந்திரமிது, பிரேதமாகச் சரீரத்தை விட்டசைவர்களை எற்றுத்தன் தொடையில்வைத்து, என்று பல வசனங்கள் சைவருக்கே மோட்சமென்றும், சைவமந்திரமே உபதேசிக்கப்படுமென்றும் குறித்தமையால், அசைவராய்க் காசியில் மரிப்பவர்க்கு முத்தியில்லை யென்றும் பெருவழக்கால் சைவபாசுபத சப்தங்கள் தாந்திரிகரிடத்தே நிலைபெறுவதால் தாந்திரிகபஞ்சாட்சரமே யுபதேசிக்கப்படுமென்றும் தாந்திரிகருக்கே முத்தி

பென்றுஞ் சொல்லப்பாற்றன்றோவெனின், அற்றன்று. வேதமு
டிவிற் பேரணியான என்று பஞ்சாக்ஷரத்திற்கு அடைகொடுத்த
மையானும், ஓமிதி அக்ரே வ்யாஹரேத் நம இதி பஸ்சாத்
ததஸ் சிவாயேத்யக்ஷரத்ரயம் ஓம் என்று முதலில் கூறுக
நமவென்று பின்னர் சிவாயவென்றதன்மேல், என்றும், 'நகா-
ராதி யகாராந்தம்' என்றும், தைத்திரீயம் முதலிய யஜுர்
வேதத்தின் நூற்றொரு சாகைகளிலும் நமஸ்காரத்தை முன்னிட்
டபஞ்சாக்ஷரமே படிக்கப்படுதலானும், சிகாரத்தைமுன்னிட்ட
தாந்திரிக மந்திரத்துக்கதிகாரியான அச்சைவர் இவ்வுபநிடதத்தி
ல் குறிக்கப்பட்டவராகார். அன்றி சிவபுராணம் வாயு சங்கிதையி
ன் இறுதியில் வைதிக பாசுபதர்களுக்கே காசியில் சிவசோதியில்
ஐக்கியங் கூறப்பட்டமையால் அவைதிகன் இங்கு குறிக்கப்பட்
டானென்ற தெவ்வாற்றானுமியையாது. அற்றேல் வைதிகபாசுபத
ரன்றி மற்றவர்க்கு காசிமரணத்தால் முக்திகூடாதோவெனின், அ
னேக சுருதிஸ்மிருதி இதிகாசபுராணங்கள் ஒருவழியாய் எல்லா
ச் செந்துக்களுக்குங்காசிமரணத்தால் கருணைத்தடங்கடலாய கா
ளகண்டம் இருவைக்கிடை வீடுகைகூடுமென நிருபித்தலால், இது
சைவரைச் சிறப்பித்ததேயன்றி விதியாகமாட்டாது. சைவம் வை
ஷ்ணவம் முதலிய விஷயப் பற்றேதுமின்றி பொதுவாய்த் தோன்
றிய இச்சாபாலவசனம் ஒரு விசேடத்தில் அடங்கிப் பொருள்
கொடுக்காதாமென்க சாமானிய விசேஷபாவங்கள் மந்திரங்க
ளில் அமைவது நியாயமேயாதலால் இங்குமவ்விதம் கூறுதல் குற்
றமுடைத்தாகாதேயெனின் அஃது மந்திரவியலறியாமையால் நி
கழ்ந்த கூற்றாம். எங்ஙனமெனிற் கூறுதும் ஒரு மந்திரத்திற்குஓர்
வகையே பிரமாணம் பொருள் விரித்தால் அங்கு அதனையே சிறப்
பாய் அம்மந்திரத்திலடங்கிய சொல்லுக்குப் பொருளெனக் கொ
ள்ளவேண்டும். இங்ஙனமின்றி மற்றவர்க்கும் பைரவர் யாத
னையுடன் சிவப்பிராப்தி யுண்டெனக் குறித்தமையால் சைவஜீவ
ர்களுக் கென்பதற்கு வசனங்கள் ஸ்பரவயாதனுதி இடையூறின்
றி பரசிவோபதேசப் பயனை அக்கணத்தேயவர்பெறுவாரென, சி
வஞானிகளைப் புகழ்ந்தே சைவச் சொல்லாமெனக் கொள்க, இ
வ்வளவால் பரமசிவன் பிரணவமெலந்தருளும் காருண்ய பூர்ண
பரமதாரக மந்திரோபதேசத்தால் முன்னர் சிவசாரூப்பியாந்தமு

க்திதோன்ற பின்னரே ஈசனாட்கொண்ட ஜீவகோடிகள் பரப்பி ரம்மானந்த கைவல்யமென்ற வீட்டைப் பெறுவாரெனக் குறிப்பது. 'தேநாஸாவம்ருதீபூத்வா மோக்ஷீபவதி அதனாலச்சென்று அமிர்தனாய் மோக்ஷத்தைப் பெறும் என்கிறது. 'அமிர்தமாய்' என்றது பதமுக்தியைக் குறித்தது. அஃது சிவசாரூப்பியமாம். அமிர்தன் என்ற சொல்லுக்கு சிவனே பொருள் என்பது இவ்வுபநிடதத்தில் மூன்றாம் கண்டத்திலேயே 'அமிர்தனதுடையராம் சதருத்ரீயம் என்றதால் ஸ்பஷ்டமாகின்றது. அதனாற்றான் அமிர்தமென்ற சொல்லுக்கு மோக்ஷ சொரூபனான ருத்திரனே பொருளென்றார் ஆசிரியர் சங்கரானந்தர். ஸ்ரீருத்திரம்சிவபரமென்பது சர்வசுருதி ஸ்மிருதி இதிஹாச சம்மதமாதலால் அவ்வளவையும் மாற்றுவது கூடாமைபற்றி அமிர்தனென்ற சொல்லுக்குப் பொருள்சிவனென்றோம். இவ்விஷயத்தைமேலேவிரிப்போம். 'அம்ருதீபூத்வா' என்றவிடத்தில் அமிர்தசப்தத்தின் மேல் அமைந்த ஈ என்ற தத்திதவிகுதியின் பொருள். 'அபூததத்பாவம்'என்ற முன்னில்லாதுண்டாவதாம். இங்கு இல்லதுவாராதாகையின் அவித்தையினாற்றடைப்பட்டு இல்லதுபோலத்தோன்றிய சிவசொரூபம் உண்டாயதுபோல் தானெனவறியப்படுவதால் அங்ஙனமுபசரித்ததெனக. 'மோக்ஷீபவதி' என்றதும் நித்தமுத்தாத்தும சொரூபத்தினுபசாரமே யாமெனக. இதனால் அவிமுக்தோபாசகர்களுக்கு ஆசிரியன்றிருமேனியதிட்டித்த பரமேசுவரன் அச்சரீரத்தினிறுதியில் அவனையாட்கொண்டு தமதருள் வலியால் அத்துவயதாரகமகாமந்திரோபதேசஞ்செய்து தன்மயமாக்கி கைவல்யம் பெறுமாறு அனுக்கிரகிக்கின்றானென்றது பெறப்பட்டது- அதனாற்றான் புறமதத்தவருங்கூட காசியில் மரணமடைந்தவர் சிவசொரூபம் பெறுவாரென விசுவகுணாதர்சம்முதலியவற்றுளெடுத்தார்கள். இதனால் அதர்வசிகாவிலாச விஸ்தரமென்ற நூலியற்றிய வைணவரொருவர் தாரகமந்திரத்துக்கு ராமமந்திரமெனப் பொருளிட்டதும், அமிர்தமென்றசொல்லுக்கு சிவனன்றிவேறு பொருள் கூறியதும், சைவருள் ஓர் சாரார் ஈசனிடத்துக் காசியில் மரித்தவர் இறுதியிற் சிவதீட்சைபெற்று பாசமொழியப் பெறுவாரென அவைதிகப் பொருளிட்டதும், தாந்திரிகப் பஞ்சாக்கரமே தாரகப்பதப்பொருளென்றதும், பொருட்டமோற்றமா

ய்புறக்கணிககப்பட்டதென்க. சைவத்தில் நிந்திக்கப்பட்ட சன்னியாசத்தின் பெறுமையை இஃதளவிலாது புகழ்வதாலும் ருத்திரத்தின் மகிமையை சீர்பெறப் பேசுவதாலும், தாந்திரிக சைவ வைணவங்களுக்கிடங்கொடாத சுத்தவைதிக சிவாத்வைத சித்தாந்தசார சாகரமேயாமீதெனக்கொள்க.

அவதாரணிகை

இனி இவ்வவிமுக்தோபாசனையில் தேர்ந்தவர் வேறு எவ்விடத்துச் சென்றாலும் பாவனையசித்தி அவருக்குமுண்டெனக் காட்டினமையால் எஞ்ஞான்றும் அவிமுக்தத்தை விடக்கூடாது என்று உபதேசிக்கின்றார்,

தஸ்மாத³விமுக்தமேவ நிஷேவேத
அவிமுக்தம் ந விமுஞ்சேத் என்று

(இ—ள்) ஆதலால் அவிமுக்தத்தையே சேவிக்க வேண்டும், அவிமுக்தத்தை விடக்கூடாது எ—று,

(வி—ரை) அவிமுக்தமென்பது அண்டத்திற் காசிப்பதியும், பிண்டத்திற் புருவநடுவுமாம்-

அவதாரணிகை

இதன் முடிவுரை கூறுகின்றார்.

ஏவமேவைதத்³ யாஜ்ஞவல்க்ய:

(இ—ள்) இங்ஙனமேயீது வென்றார் யாக்ஞவல்கியர் எ—று

(வி—ரை) யாக்ஞவல்கியரென்று விளிவேற்றுமையாய்ப் படித்துழி ஓ யாக்ஞவல்கிய இஃதிங்ஙனமன்றோவென பிரகஸ்பதியனுவதித்தாரெனப்பொருள் கொள்ளவேண்டும்.

அவிமுக்தஜாபாலத்தின் முதற்கண்டம் முற்றிற்று.

அவதரணிகை

இம்முதற்கண்டத்திற் கூறியபடி அவிமுக்த க்ஷேத்திரத்தின் சொரூபத்தை வெளிப்படையாக அண்டத்திற் குருக்ஷேத்திரத்திற்கடுத்ததென முன் கண்டத்திலே நிரூபித்தாராயினும், அது பிண்டத்தில் இஃதெனக்குறிக்கவேண்டி வேதபுருஷன் கருணையால் அத்திரியாக்ஞவல்கிய சம்வாதரூபமாய் இரண்டாங்கண்டத்தைத் தொடங்குகின்றார்.

> அத² ஹைநமத்ரி: பப்ரச்ச² யாஜ்ஞவல்க்யம் ய
> ஏஷோऽநந்தோऽவ்யக்த ஆத்மா தம் கத²மஹம் விஜாநீ
> யாமிதி

(இ—ள்) இனி அத்திரியாக்ஞவல்கியரை வினவினர். எவன் அனந்தனும் அவ்வியக்தனுமாயுள்ளவன் இவ்வாத்துமா? அவனையான் எப்படியறிவேன்? என்று.

(வி—ரை) அத்திரியென்பவர் பிரமதேவர் புத்திரர்களுள் ஒருவர். இவருக்கு இப்பெயர் காரணவிடுகுறியாம். த்ரீயென்றது மூன்றைக்கடந்தவராதலின் அத்திரியெனப்படுவர். எவருக்குமுக்குணங்கள், அல்லது முக்குணகாரியங்களான பிரபஞ்சங்கள் அல்லது பிரபஞ்சவாசனை முதலியன' ஆத்யாத்மிகம் முதலியதாபத்திரயம், மூவவத்தைகள்முதலிய விபரீத மும்மைகளெலாமிவரிடத்திலின்மையால் இவர் அத்திரியெனப்படுவர். அன்றி திருமூர்த்திகளையும் வெவ்வேறாக உணர்ந்தொழுகாது ஒரேமூர்த்தியாக உபாசித்தமகானுபாவராதலாலிவர் அத்ரியெனப்பட்டார். இவர் முக்குணக்காரியங்களைக் கடந்து பூர்வசுகிருத பரிபாகத்தால் முற்றறிவு பெற்றவராயினும், பிரம்மவித்யாசம்பிரதாயம் மாறாது உலகத்தில் நிலைபெறவேண்டி அவிமுக்தாத்மோபாஸ்தியை ஆசிரியன் முகத்தபூர்வமாயறிவார்போல வினவுவாராயினர் என்பது இவ்வர்த்தவாத பீடிகையின் கருத்து. இவர் வினவுமிலக்கணங்களே இவர்க்கமைந்துள்ள வான்ம ஞானத்தைக் குறிக்கின்றன— அனந்தனும் என்பதாதி விசேடங்களை ஆன்மாவிடத்து இவர்குறித்தமையாலெனக்க. அனந்தன் = இறுதியில்லாதவன் அல்லது ...

வனிலும் வேறானதும் மேலானதுமான அந்தமொன்றிலையவனனந்தன். ஆயின், ஆதிநடு அந்தமில்லாச் சீசாதியெனவும், அகிலப் பிரபஞ்சங்களும் ஒடுங்கும் ஸ்தானமெனவும், பிரமத்துக்கமைந்தசொரூப தடத்தலட்சணங்களிதனாற் குறிக்கப்பட்டன. ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம சத்தியமும்ஞானமும் அனந்தமு பிரம்மமாம் என்பதாதி பல சுருதிகளிதனாற் றழுவப்பட்டன. அவ்யக்தன் என்றது நாமரூபம் முதலிய வ்யக்த தருமங்களேதுமிலாதானென்றதும், மனம் வாக்குமுதலிய புலன்களுக்கு அவனகப்படானென்றதும், நிரூபிக்கப்பட்டதாம், ஆதலால் மனம வாக்குகளுக்கெட்டாத நிர்விசேஷ பரப்பிரம்மத்தை யானறிவதெப்படியென வினவியது பொருத்தமுடையதேயாம். யானென்றமையால் அகங்காரஞ்சப்பட்ட ஜீவன் குறிக்கப்படுகின்றான். இதனால் ஆன்மசொரூபத்தை அகங்காரியறிவதெப்படி என்பது கேள்வியின் முடிந்தகருத்தாயிற்று. இவ்வினா ஸவிசேஷப் பிரமத்தைப்பற்றாது சுத்தான்மசொரூபத்தையே பற்றியதெனவிளக்கும்படி இவ்வான்மாவெனச் சுட்டுகின்றார். சுகம், துக்கம் முதலிய விபரீதங்களுக்காய்த் தானென்ன தன்மைத் தானமாயனுபவிக்கப் படுகின்றவனிவன். இவனையானறிவேனெனின், இவனிடத்துத் தோன்றும் கர்த்திருத்வம் போக்திருத்வம், சுகித்வம் துக்கித்வம் முதலிய பாசங்கணீங்கி அனந்தாவ்யக்தமுதலிய சொரூபங்கள் விளங்கப்பெறுவதெப்படி யென்பது கருத்தாம்.

அவதரணிகை

இதற்கு யாக்ஞவல்கியர் மறுமொழி கூறுகின்றார்

ஸ ஹோவாச யாஜ்ஞவல்க்ய: ஸோவிமுக்த உபா
ஸ்ய: | ய ஏஷோநந்தோவ்யக்த ஆத்மா ஸோவி
முக்தே ப்ரதிஷ்டித இதி |

(இ—ள்) அந்த யாக்ஞவல்கியர் சொன்னார் அவன் அவிமுக்தத்திலுபாசிக்கப்படுவன், யாவனிவனனந்தனு மவ்யக்தனுமான ஆன்மா, அவனவிமுக்தத்திற் காணப்படுவான், என்று.

(வி—ரை) அவனையெவ்விதமறிவேனென்ற வினாவுக்கு அவிமுக்தவுபாஸ்தியாலறியலாமென்றதேவதற்குச் சமாதானமாம்.

அவதாரணிகை

அவிமுக்தோபாஸ்தியெனின் உபாசநஸ்தானத்தை யறிந்தாலன்றி அது முற்றுப் பெருது. ஆகவே அவிமுக்த மெங்குளதென அதன்மேல் அத்திரி வினு நிகழ்த்துகின்ருர்

𑌸𑍋𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍁𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤 𑌇𑌤𑌿 ।

(இ—ள்) அவிமுக்தம் எங்குளது, என்றது

அவதரணிகை

விடையளிக்கின்ருர்.

𑌵𑌰𑌣𑌾𑌯𑌾𑌂 𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌂𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤 𑌇𑌤𑌿,

(இ—ள்) வரணையிலும் நாசியிலுமிடையே யுள்ளதாம்

அவதரணிகை

மேல்வினவுகின்ருர்

𑌕𑌾 𑌵𑍈 𑌵𑌰𑌣𑌾 𑌕𑌾 𑌚 𑌨𑌾𑌸𑍀𑌤𑌿

(இ—ள்) எது வரணை, எது நாசியாம்? என்றது

அவரதணிகை

விடைகூறுகின்ருர்.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑌾𑌨𑍍 𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌵𑌾𑌰𑌯
𑌤𑍀𑌤𑌿 𑌵𑌰𑌣𑌾 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑌾𑌨𑍍
𑌪𑌾𑌪𑌾𑌨𑍍 𑌨𑌾𑌶𑌯𑌤𑍀𑌤𑌿 𑌤𑍇𑌨 𑌨𑌾𑌸𑍀 𑌭𑌵𑌤𑌿 ॥

(இ—ள்) இந்திரியங்களாலுண்டாகும் தோஷங்களெல்லாவற்றையும் நாசஞ் செய்விப்பதால் 'வரணை' எனப்படும் இந்திரியங்களாற் செய்யப்பட்ட பாபங்களையெலாம் நாசஞ் செய்விப்பதால் நாசியெனப்படும்.

(வி—ரை) இந்திரியங்களா லுண்டாகும் தோஷங்களென்றால், அவை தமக்கு இம்மையைக்கெடுக்குங் குற்றங்களென்றும் பாபங்களென்றால் மறுமையைக் கெடுக்குங் குற்றங்களென்றும் கொள்ளவேண்டும். 'வரணா ,என்றது 'வாரணா 'வென்ற சொல்லின் சிதைவு. இவ்விரண்டுஞ் சேர்ந்தே 'வாரணாசீ .என்றசொல்லாய்ப் பிண்டத்திற் காசிக்குப் பெயராயது. 'வரணா—நாசீ, என்ற இரு சொற்களும் ஒன்று சேர்ந்து பிருஷோதராதி (ப்ருஷோதராதி) இலக்கணங்கொண்டு. வாராணசி' என்றாயது, இதனை' வரணாசி' யென்றும், வாரணாசி, 'யென்றும், ''வாராணசி யென்றும் பலவிதமாய் மருவி வழங்குவர்.

அவதாரிகை

இவற்றால் அவிமுக்தத்தானம் வரணை, நாசி இரண்டினிடையென்று குறிக்கப்படினும், அவ்வரணை நாசிகளிவையென வறியப்படாமையின், அவைகளின் இடம்யாதென மீண்டும் வினவுகின்றார்.

க தத்3வரணாஸ்யா ஸ்தா2நம் ப4வதீதி'

(இ—ள்) இதற்கிடம் யாது? என்பது.

(வி—ரை) இதற்கெனப் பெண்பாற் பன்மைகொண்டு வினவவேண்டியதை ஒன்றன்பாலொருமை கொண்டு வினவியது வேதவிதி பற்றி குற்றமற்றதேயாம். அல்லது, அவிமுக்தத்தினிடம் ஏதென வினவியதாகப் பொருள் கொள்ளினும் கொள்ளலாம் அற்றேல் முன்வினவியதையே மீண்டும் வினவுவதால் கூறியது கூற்றென்னும் குற்றம்வாராதோவெனின், அன்று; முன்னர் அவிமுக்தம் எங்குளதெனக் கேட்டதற்கு 'வரணைக்கும் நாசிக்குமிடையேயுள' தெனவிடையளித்து அவ்வரணை நாசிகளின் சொரூபம் நிரூபிக்கப்பட்டதேயன்றி, அஃதிங்குளவென, அண்டத்திலாதல் பிண்டத்திலாதல் ஸ்பஷ்டமாய் குறிப்பிடப்படாமையின் அதனை மீண்டும் வினவ நேர்ந்ததாம். ஆயின் முன்னர் வினவியவினுவிற்கு விடைமுறைபிறழ்ந்ததாய் ஒன்று வினவ மற்றொன்று கூறுதலால் அவ்வாக்கியம் பொருத்தமற்றொழியாதோ வெனின்

வெளிப்படையாக 'இஃது அதனிட'மென் குறித்து பகராதொழியினும், 'வரணாசிகளினிடையே'யென ஒருவாறு உசிதமான விடைகிடைத்தமையின் வாக்கியப்பொருத்தமின்மைக்குற்றமங்கணுகாது. இங்கு அதிமேதாவிகளுக்கே புலப்படுமாறு- ஆசிரியரளித்த விடைமத்திமாதிகளுக்கும், பயன்படுமாறு மீண்டுமதனையே விளக்கிக்காட்டக்கருதி, அத்திரிமுனிவரிவ் வினாவைநிகழ்த்தினரென்க.

அவதாரணிகை

இதற்குவிடை விரியாய்யாக்ஞவல்கியர் கூறுகின்றார்.

> ப்ருவோர் க்ராணஸ்ய ச யஸ்ஸந்தி: ஸ ஏஷ
> த்யௌர்லோகஸ்ய பரஸ்ய ச ஸந்திர்பவ
> தீதி.

(இ—ள்) புருவங்களுக்கும் நாசிக்கும் எங்கு சேர்க்கையுண்டாம் அதுவே சொர்க்கலோகத்திற்கும் மற்றயலோகங்களுக் குஞ்சந்தியாம். என்பது

(வி—ரை) புருவங்களுக்கும் நாசிக்கும் சந்தி யென்றது அண்டத்தில். நாசியென்றதுநாசியின் அடிப்புறத்தைக் குறித்தது இதனையே நாசிகாக்கிரமென்பாருமுளர். இதுவே யோக சாஸ்திரங்களில் சோதிலிங்கத்தானமெனவும்' நாசியினடியெனவும், இருகளச்சக்கிரமெனவும், குருஸ்தானமெனவும். இந்திரன் வில்விடமெனவும், பிண்டாவிமுக்தமெனவும், வாசித்தானமெனவும், காசிக்ஷேத்திரமெனவும். ஆஞ்ஞாத்தானமெனவும், மற்றும்பலவகைவியவகரிக்கப்படும். இஃதுசொர்க்கலோகத்திற்கு மென்பதாதி அண்டாவிமுக்தத்தைச்குறித்தது. மற்றய லோகங்களென்றது கீழுலகங்களை- சொர்க்கமென்றதுமேலுலகங்களை- இவ்விடம்மேலாராதாரங்களுக்குக் கீழும், கீழாராதாரங்களுக்குமேலுமிருத்தலால் இதனைமேலுலகங்களுக்குங் கீழுலகங்களுக்குஞ் சந்தியென்றுபசரித்தது. ஆதலாற்றான் நாசியைத்தொட்டு பிராணாயாமம் செய்யுங்காலத்துச் சரிக்கப்பட்டும் தியமந்திரத்தில் கீழுலகமாயபூலோ

கந்தொட்டு மேலுலகமாக சத்தியலோகம் வரையுள்ள லோகங்க
ளேழையுங் குறிக்கும் சத்தயஹாவ்யா ஹிருதிகளமைக்கப்பட்டன
வாம். அச்சத்தலோகங்களுக்கும் நீர்நிலம்முதலியபஞ்சபூதமயமான
கீழுலகங்களுக்கும், எல்லாவற்றையுமியக்கு மீசனது பேராற்றலே
பொருத்தமாமெனக்குறித்தற்கே வப்பிராணாயாமமந்திரத்தில் மே
லுலகங்களின் பெயர்களான வேழுவியாஹிருதிகளுக்கும், பஞ்ச
பூதமயமான கீழுலகங்களின் பெயரான நீர் முதலியவற்றைக் கு
றிக்குஞ் சொற்களுக்கும், இடையே ஈசனது பேராற்றலைக் குறிக்
கும் காயத்ரீ மகாமந்திர மமைக்கப்பட்டதாம், மேல்ஆதாரங்க
ளில் அமைக்கக்கூடிய பூலோகம் முதலிய வுலகங்களுக்குக்கீழும்
கீழாதாரங்களிலுள்ள பாதாளங்களுக்கு மேலும் உள்ளது பூ
லோகமேயாதலின் அண்டத்தைப் பூலோகத்திற் காசிப் பதியும்
பிண்டத்தில் புருவநடுவு இதற்கு ஸ்தானமென்றது பொருத்த மு
டைய்தேயாம். இவ்வுண்மையை முதலில் யாக்ஞவல்கியரிடம்
கேட்டறிந்து இருதார்த்தத்தை பெற்றவர் அத்திரியே யாதலால்
அம்மாமுனிவரே அந்த 'பூ' வென்ற வியாஹிருதிக்கு ரிஷியாகக்
குறிக்கப்பட்டவர். அதற்கு சந்தமும் காயத்ரீயெனப்பட்டது
ஆக இவ்விமுக்தத்திற்கு அண்டத்திலும் பிண்டத்திலும் வெளிப்
படையாய்த் தானமீதெனத் குறிக்கப்பட்டது.

அவதாரணிகை

உண்மையறிந்தய்யும் பிரம்மநிட்டற்கு இஃதே சந்தியோ
பாஸ்தித்தானமாமெனவும் நிரூபிக்கின்றார்.

ஸ ஏவ ஸம்பிரஸாதோ வைஹாவிடி உவா

ஸ தஜ க்தி

(இ—ள்) இந்தச் சந்தியையே சந்தியெனக்கொண்டு
பிரம நிட்டர்களுபாசிக்கின்றார்.

(வி—ரை) ப்ரம்மநிட்டர்களென்றமையால் கன்மய்களுக்குரி
ய முதல் மூவாச்சிரமிகளைக் கடந்து நான்காவது ஆச்சிரமத்தைப்
பெற்றவற்கு நித்தியகர்மமாய சந்தியாநுட்டானமிலையென மயக்

கூறும் மதியிலிகளை நோக்கி அவற்கு எப்பொழுதும் இடையிருந்து சந்தியாநுட்டான முண்டெனக் குறிக்கப்பட்டது. அண்டத்தி லும் பிரகாசமயமான பகலுக்கும் இருண்மயமான இரவுக்குஞ் சந்தியே சந்தியாகாலமென்று சொல்லப்படுகிறது. அதையனுசரித்தே இங்கும் சுத்தப்பிரகாசமயமாய் ஞானஸ்தானமாயிருக்கும் ப்ரணவ திருதீய மாத்திரா ஸ்தானமெனப்படும் புருவமத்தியத்துக்குமேலுள்ள வாதாரங்களாறுக்குங் கீழாதாரங்களாறுக்கும் உள்ள சந்தியெனப்பட்டதாம். இதனால் இவ்வவிமுக்தோபாஸ்திபிரமநிட்டர்க்கு ஆன்மா பரோக்ஷ சாக்ஷாத்காரஹேதுவெனக் குறிக்கப்பட்டது.

அவதாரணிகை

அவ்வான்மாவுக்கு அவிமுக்தத்துவம் இயல்பாதலால் அவனையுபாசிப்பதற்குச் சிறந்ததான மேற்கண்ட வாரணாசி ஸ்தானமும். அவன் பெயராற்றானே வழங்கப்படுகின்றதென நிரூபிக்கின்றார்

ஸோவிமுக்த ஸோவிமுக்த உபாஸ்ய இதி

(இ—ள்) அவனவிமுக்தன் அவிமுத்தத்திலேயே அவனுபாசிக்கத்த வனென்று எ—று

(வி—ரை) அவிமுக்தன் = முக்தனல்லாதவன். முக்தன், பக்தன்; அவனல்லாதான் அவிமுக்தன் நித்தியமுக்தசொரூபன் அதாவது சொபாவத்தில் நிஷ்களங்கனென்பதுபொருள். அவிமுக்தனையுடையது = அவனை யுபாசித்தற்கிடமாயுளது அவிமுக்தமாம். இதனால் அவிமுக்தமென்று அவ்விடத்துக்கமைந்த பெயர் காரணவிடுகுறியாமென்றாயிற்று. தஹராகாசத்தைச் சிதம்பரமென்றாற்போல இதனை அவிமுக்தமென்றதாமென்க.

அவதாரணிகை

இவ்வவிமுக்தோபாஸ்தி பரிபூர்ணனுக்கு பிரமவித்தியாசாரியத்துவம் உண்டாமென்கின்றார்

ஸோऽவிமுக்தம் ஜ்ஞாநமாசஷ்டே
யோ வை ததேவம் வேத ||

(இ—ள்) அவனவிமுக்தஞானத்தை யுபதேசிப்பான் அவனிங்ஙனமறிவான். (என்பது)

இரண்டாங்கண்டம் முற்றிற்று

அவதாரிகை

கைவல்யோபநிடதத்தில் திவ்யசிதம்பரோபாஸ்திக்குச் சாதனத்தை நிரூபிக்குமிடம் சர்வபாபக்ஷயங்களுக்கு திவ்ய ஞானோத்பத்திக் கேதுவாயுளது சதருத்ரீயமெனக்குறித்து, வரும் பிரகரணத்தில் அச்சதருத்ரீயஜபத்தை முறை பிறழாதனுட்டித்த தன்மையிற் சியாற்றான் 'அஸ்மாதவிமுக்தமாச்ரிதோ பவதி' ஆதலினவிமுக்தத்தைப் பெறுவானென நிரூபிக்கப்பட்டது, இங்ஙும் அண்டத்திற் காசியிலும், பிண்டத்திற் புருவநடுவிலும், சரீரத்தியாகமல்லது சரீராபிமானத்தியாகஞ் செய்யும் பாக்கியம்பெற்ற சென்துக்களுக்கு ஸ்ரீருத்திரகடாட்சங் கிடைக்குமென நிரூபித்தமையால் அவ்விதப் பெரும் பாக்கிய மனாயாசமாய்க்கிடைத்தற் கேதுவான அவிமுக்தாலயம் எங்ஙனம் யாவற்குங் கைகூடுமெனுஞ் சாதனத்தை யறியவிரும்பும் ஆன்மகோடிகளுக்கு உண்மை எடுத்துபதேசிக்க வேண்டி கருணைமேலீட்டினாற் பிரமஞானசாதனமாய் ஸ்ரீருத்ராத்தியாயத்தின் பெருமையை யாக்ஞவல்கிய பிரம்மசாரி சம்வாதமாய் மூன்றாங்கண்டத்தால் ஜாபாலருபதேசிக்கின்றார்.

அத ஹைநம் ப்ரஹ்மசாரிண ஊசு:
கிம் ஜப்யேநாம்ருதத்வம் ப்ரூஹீதி ||

(இ—ள்) இனியிவரைக்கண்டுப் பிரம்மசாரிகள் வினவினார்கள். எதனை ஜபித்தலினால் அமிர்தத்தன்மையைப் பெறுவான் அதனை யுபதேசித்தருளுகவென, (என்பது)

ஜாபாலோபநிடதம்

(வி—ரை) முற்கண்டத்திற் பிரம்மநிஷ்டர்களெனக்குறிக்கப்பட்டவர்களே இங்கு பிரமசாரிகளெனப்பட்டனர். முதற்கண்டத்தில் ருத்திரோபதேசத்தினால் அமிர்தத்தன்மையைப் பெற்று வீடுபெறுகின்றாரெனச் சொல்லப்பட்டமையின், வீட்டுக்கு முன்னிகழ்வதான அமிர்தத்தன்மையெனப்படும் ஸவிசேஷப்பிரமசாருப்பியமும், அவிமுக்தோபாஸ்தியின் பயனுதலாலதனையடையும் கருவிகருமமுதலியதாகாது பற்றி 'ஜப்யேனைவ து ஸம்ஸித்யேத் ப்ராஹ்மணோ' ஜபத்தாலேயே பிராமணன் சித்தி பெறுவானென ஸ்மிருதிகள் கூறுகின்றமையால் அவ்விதப்பெருமை பெற்றதூஉம், அத்தியாச்சிரமிகள் ஜபிக்கற்பாலதூஉம், சர்வாகாரபரப் பிரம்மோபாஸ்தியை நிரூபிப்பதூஉம், ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ: = எல்லாவற்றையு மடைவாய் எல்லாவுமாவாய் என, வாசிரியர் கீதையிலுபதேசித்தருளியவாறு, சார்வாத்மியயோக சித்தியைத் தருவதூஉம். யாதென்பதுகேள்வியின்முடிந்தகருத்தாம்.

அவதாரிகை

இதற்கு யாக்ஞவல்கியர் உத்தரமளிக்கின்றார்

ஸஹோவாச யாஜ்ஞவல்க்ய:
சதருத்ரீயேணேதி ||

(இ—ள்): அந்த யாக்ஞவல்கியர் புகன்றார் சதருத்ரீயத்தாலென்று.

(வி—ரை.) இங்கு அமிர்தத்தன்மையென்ற சிவசாருப்பியத்தை யனுயாசமாகப் பெற்று ஆன்மாபரோக்ஷசாக்ஷாத்காரத்தில்கருவியாதென வினவியதற்கு சதருத்ரீயத்தாலென்பதாற் சதருத்ரீயமே முக்கிய சாதனமாமென, யாக்ஞவல்கியர் நிரூபித்தார் ஆதலால், சதருத்ரீயமென்ற மஹாமந்திரசமுதாயம் மேற்கண்ட அமிர்தத்தன்மையைப் பயக்கும் பெருங்கருவியென்றதாயிற்று. அமிர்தத்தன்மையென்பது 'மிருதம்' என்றுசொல்லக்கூடிய பாவத்

தின் சம்பந்தமற்று நிற்றலையும், 'அமிர்த' மென்றுசொல்லக்கூடிய நித்தியமுக்த சிவசொரூபத்தையும், முறையேகாரணவாற்றலாலும் இடுகுறியாற்றலாலும் குறிக்கும் சொல்லாம். ஆயின், 'சதருத்ரீயத்தால் அமிர்தத்தன்மையுண்டாம்' என்றதால் சர்வபாபநிவிர்த்தியுடன் சாசுவதசிவானந்தாபிவ்யக்தியெனப்படும் அநுதிசிவத்வாபிவ்யக்தியுண்டாமென்றது சொல்லப்பட்டது. இதனால் அமிர்தத்தன்மையென்ற சொல்லுக்குக்காரணவாற்றலிடுகுறியாற்றலென்னு மிருவகையாற்றலாலும், கிடைக்கும் பாபநிவிர்த்தி, சிவத்வாபியக்திகளை நிரூபிக்கும் ஸ்மிருதீதிஹாச புராணவசனங்கள் யாவுமிதனால் தழுவப்பட்டனவாம், ஸ்மிருதிபுராண இதிஹாசங்கள் மேற்சொல்லியபடி ஸ்ரீ உருத்திராத்தியாய ஜபம் மகாபாதகம்முதலிய ஒன்பான வகைப் பாவங்களையுமொழித்திடுமெனவும், மற்றும், அநேக ஜன்மசஞ்சித்தவேதாந்த வித்தியாபிமான சம்பூர்ண பரமாதிகாரிகளுக்கு ஆத்மகைவல்யசித்தி தந்தருளுமெனவும்; நிரூபிக்கின்றன. ஈசனதிருவருளால் இருவகைப்பயனும் கைகூடுமாயினும், அவ்வப்பயன்களைக் கருதியவதிகாரிகள் அவ்வப்பயன்களைக் கொடுக்குமாற்றலுடைய தாய் தாம் கருதிய வருட்டிருமேனிகொண்ட ஆன்ம சொரூபத்தை வழிபடுவது மரபாதலின், ஆரணம், ஆதிநாதனது இருவகைச்சரீரங்களிற் கோரமெனப்படும் அவித்தியாகாரியமாய் முப்புரங்களையும சுட்டெரிக்கும் முக்கட்பிரான் முழுமுதன் திருமேனியை யிச்சத யுருத்திரீயமாமந்திரத்திற்கு தேவதையாமென்றது யஶ்ஶதருத்ரீயம் ஜுஹோதி கோரா ஏவாஸ்ய தநூ꞉ ஶமயதி = சதருத்திரீய ஹோமம் செய்தால், அவனது கோரசரீரத்தைச் சமனப்படுத்துவான் என்று. போதாயனர், கௌதமர், ஆபஸ்தம்பர், ஹிரண்யகேசர் முதலிய மகவிருடிகள் தர்மசூத்திரங்களில் இச்சதருத்திரீயத்தில் சர்வ வேதாத்தியயன சமபலமென்றார்கள். கைவல்யோபநிடதம் ஸ்பஷ்டமாய் ப்ரம்மஹத்தி சுராபானமுதலிய மஹாபாதகங்களினிவிர்த்திசெய்வதாம் சதருத்திரீய ஜபமென்றது. அங்ஙனம் சுதசந்தியையும் யஸ்ஸ்வாய தேதாநிக்தும் ஸதருத்ரீயமஹ்யே செலக | ஸுராபாநாஸ்ஸ ப்ரவாநாஸ ஸக்ருத்க்ருவா ஜாதயோ ||ஸேவ்யதேஹ ஹத்யா ஜதிகைவல்ய

ஸ்ராவிந: = எவன் சிரத்தையுடன் நித்தியம் சதருத்திரீய
த்தைச் சபிப்பான், நெருப்பிட்டுக் கொளுத்தியது கட்குடித்தல்
செய்யக்கூடாததைச் செய்தல் பிரம்மஹத்தி, முதலான பாவங்க
ளினின்றுமவன் விடுபடுகிறான் என்று கைவல்யசாகையுடை
யோர் சொல்லுகிறார்கள் என்றது. சாதாதபர் [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ = ஸுராபணம், குரு
தல் பகமனம், ஸ்வர்ணஸ்தேயம்' பிரம்மஹத்தி முதலியபாவங்களை
ச்செய்தவனாயினும், விதிவத்தாய் பாசுபதவிரதத்தை யனுட்டி
த்து ஸ்ரீருத்திரமந்திரத்தைச் ஜபம்செய்தாலவன் சர்வபாவங்களி
ன்றும் விடுபடுவான்.' என்றார். ' [illegible]
[illegible]
[illegible] ॥ 'இதி [illegible]
[illegible]
[illegible] । இதி = ஸுராபானம், ஸ்
வர்ணஸ்தேயம் இவைகளைச்செய்தவனாயினும், ஜலத்திலிருந்து
புருஷசூக்த ஜபம் செய்பவனும்
உருத்திர ஜபம் செய்பவனும். சர்வபாவங்களினின்றும் விடப்படுவான் என்றும், பதினொரு மு
றையாவது உருத்திரங்களை யாவிருத்தி செய்தவன் மகாபாவங்க
ளினின்றும் விடப்படுவான எனபதில் ஐயமில்லை. என்றும், மனு
வும் யாக்ஞவல்கியரும் வசிட்டரும் சொன்னார்கள் அங்ஙனமே
[illegible]
= பதினோராவிருத்தி உருத்திரஜபம் செய்தால் சகலபாவங்களி
னின்றும் விடுபடுகிறான், என்பதாதி பல ஸ்மிருதிவசனங்கள் ம
காபாபக்ஷயத்திற்கு ஏதுவாமென்றன. மற்றுஞ்சில [illegible]
[illegible] ।
[illegible] ॥
[illegible] ॥ க ॥ [illegible]
[illegible] ।

[illegible] ॥ = ஓவிஷ்ணுவே எவன் சிரத்தையுடன் தினந்தோறும் சதருத்திரீயத்தைச் சபிப்பான், அவன் மரணத்துக்குமேல் ஞானத்தாலேமுக்தியடைவான். (௧) இச்சதருத்திரீயத்தை எவன்காலையிலெழுந்து பிரயத்தினத்துடன் கைகளைக்கூப்பிப் பரமசிவனைத் தொழுது ஜபம்செய்து வருவானவனடையாப்பேறு யாதுமில்லை. என்றும் இது முக்திஹேதுவென நிரூபிக்கப்பட்டது. [illegible] ॥௧॥ [illegible] ॥ போகம் வேண்டுபவனுக்கும் மோட்சமிச்சிப்பவனுக்கும், பிராயச்சித்தத்தை யிச்சிப்பவனுக்கும் ஸ்ரீருத்திரத்தை விட்டால் வேறு கதியில்லை. (௧) சன்னியாசி ஸ்ரீ ருத்திரத்தையும் பிரணவத்தையும் நித்தியமாவர்த்திசெய்யவேண்டும். என்பதாதி பலவாக்கியங்கள் பாபநிவிர்த்தி, புண்யபலப் பிராப்தி, ஏதுபீதா மெனவும், மோட்சவேதுவீதாமெனவும், சேர்த்தொருவழிபட்டு நிரூபித்தன மேற்கண்டபடி இச்சதருத்ரீயம் போகமோட்சங்களுக்குச் சாதக மென்றேற்பட்டது. இங்கு வினவிய பிருமசாரிகள் ஆச்ரமதர்மத்திற் குறியவராயின் முதலாச்சிரமிகளும் ப்ரமநிஷ்டர்களாயின், சரமாச்சிரமிகளும் ஆவாராகவே அவ்விருவர்க்கும் அவிமுக்தத்தில் தாரகப்பிரமவித்தையாலடையும் பரமப்பிரயோஜனத்தைத் தருவதற்குறியது ஸர்வவேதாந்த ஸாரமாயுள்ள ஸ்ரீ ருத்திரோபநிஷத்தையெ யாக்ஞவல்கியர் நிரூபித்தருளினரென்க. யசர்வேதத்துள்ள நூற்றொருசாகைகளினும் இந்த ஸ்ரீருத்திரம் படிக்கப்படுதலின், இதைச் சதருத்ரியமென வழங்குவதென ஸ்ரீ பட்டபாஸ்கராசாரியர், ஸ்ரீமாதவாசாரியர், ஸ்ரீம உவ்வட்டாசாரியர், கர்க்கியாச்சாரியர்,முதலிய வேதபாடியக்காரர்கள் புகலுறல ([illegible]) = சதமென்பதளவற்றதைக்குறிக்கும். [illegible] = விசுவம். சதம் சகஸ்ரமிவையெல்லாம் அளவற்றதைக் குறிப்பதாம் என்று வேதமும் பாரதமுங் கூறுதலால் சதமென்றதற்கு அளவற்றதெனப் பொருளேற்படுதலால் சதவுருத்ரீயமென்றதற்கு அளவிறந்த

ஸ்ரீருத்திர மூர்த்திகளின் பெருமையைக்குறிக்குமிவ் வத்தியாயம் 'சதருத்திரீயமெனப்படு'மென 'ஶதாநி ருத்ரா:' (சத அளவிறந்த) ருத்திரர்களைத் தேவதையாய் (பிரதிபாத்யர்களாய்) (உடையது (ஓர் அத்தியாயம்) என்ற பொருளில் ஶதருத்ர என்றசொல்லுக்கு வ (ஈயவென்றுதிரியும்) விகுதியைக் கூட்டுக. என்றபாணினி சூத்திரவிலக்கணத்துக்கிணங்கி ஆசிரியர் அபினவசங்கர பகவத்பாதர் ஸ்ரீருத்திரசங்கிதாபாடியத்திற் பொருளுரைத்தனர். அநேக உருத்திர மூர்த்திகளைத் துதிக்கவெழுந்த ருத்திரசங்கிதை, யஜுர்வேதமன்றி ருக்வேத சாமவேத அதர்வண வேதங்களிலும் ஸ்பட்டமாய் படிக்கப்படுகின்றன. இருக்குவேதங்களிலிருந்து சூக்தங்கள் பஞ்சருத்திரங்களெனவும், சாமவேதத்தில் ஆவொராஜா முதலிய சிலசாமங்கள் ருத்திரசங்கிதையெனவும், அதர்வணவேதத்தில் காண்டத்திலோர் சூக்தம் மஹாருத்திரமெனவும், வழங்கப்படுகின்றது. எல்லாவற்றிலும் பரமேச்சுர நமஸ்காரங்களும், பரமேச்சுரத் தோத்திரங்களும் பரமேச்சுரனை நானாரூபனாக நிரூபிப்பதுமே காணப்படுகின்றது. அனேகருத்திர மூர்த்திகளைப் பிரதிபாதிக்கும் சூக்தம் சதஉருத்ரீயமாகில் எல்லாவேதங்களிலுமுள்ள உருத்திரங்களியாவும் அங்ஙனமாகாவோவெனின், ஸயூராயம் ஶதருத்ரீயம் யஜுஷாம் ஸாரமுத்தமம் | வேதேஷு யஜுஷாம் வேத்யோ ஶதருத்ரீயம் ஶதருத்ரீயம் ஜுஹோதி யஜுர்வேதங்களுக்குள்ளே ஸாரமாயும் உத்தமமாயுமுள்ளது சதஉருத்திராத்தியாயமாம். வேதங்களுக்குள் யசுர்வேதத்தின் மத்தியிலேயே சதஉருக்திரீயம் படிக்கப்படுகின்றது, சதருத்திரீயத்தால் ஓமம் செய்வான்'' என்பதாதி புராணவேதப் பெருவழக்கால் இச்சொல்லை யசுர்வேதங்களில் (நூற்றொருசாகைகளில்) உள்ள உருத்திராத்தியாயத்துக்கே யிடுகுறியாகவும் கொள்ளவேண்டுமாதலால் மற்றவை சதருத்திரீயமாகாவென்க, ஆயின், மேற்கண்டபடி நூறுசாகைகளிற் படிக்கப்படுதலாற் சதருத்திரீயமென்ற பொருளும், அளவிறந்த ருத்திர மூர்த்திகளைப்பிரதிபாதனம் செய்வதாற் சதருத்திரீயமென்றபொருளும், இச்சதருத்திரீயமென்றசொல்லுக்கு இலக்கணங்களால்காண்

ணப்பொருளாயமையினும், சுருதிஸ்மிருதி இதிஹாசபெருவழ்க்கால் யசுர்வேதங்களிற்ப டிக்கப்படும் உருத்திராத்தியாய:மேச்த உருத்திரீயச் சொல்லுக்கு இடுகுறிப்பொருளாயமையுமென்க. இதனால் அநேக சுருதிஸ்மிருதி இதிஹாஸபுராணங்களிற் கூறியவாறு ஸர்வாவஸ்தாஸ்வநுவ்ருத்தாபரோக்ஷஸாக்ஷாத்கார ரூபங்களான விருவகையமிர்த்தன்மைகளும், இதன் ஜபத்தாற் சித்திக்குமென்று யாக்ஞவல்கியர் அருளிச்செய்ததுமிக்கப் பொருத்முடையதாயிற்று. ஜபமென்பது தனித்துநாவொன்றைப் புரட்டிநான் கொலிகளை உண்டாக்குவது மட்டுமல்ல. மற்று அம்மந்திரத்தின் பொருளையனுசந்தானம் செய்வதூஉம், அக்கரங்களையமைதியுடன் முறைபிறழாதுச் சரிப்பதுமேயாம். ஆயின், ஈண்டு வினாவிலும் விடையிலும் உச்சரிக்கப்படும் எழுத்துக்கள் மட்டுங்குறித்தவிருவகையமிர்தத்தன்மைகளையும் கொடுக்குமாற்றல் பெற்றில. மற்று, அவற்றின் பொருளை யனுசந்தானம் செய்துவவற்றின் பொருளாயபரமேசனே தாமென, சோகம் பாவனையில் சித்தி பெறுவோர்க்கேகருதிய பயன் கைகூடுமாமென்பது உபதேசமுக்கியக் கருத்தாம்.

அவதாரணிகை

இத்தகைய பெரும் பெருமை இச்சதருத்திரீயத்துக் கமைந்தது யாது காரணம்பற்றியென சீடர்க்கு நிகழுமையத்தை எதிர்நோக்கியதனை யகற்றுவாராய் அதன்பெருமைகுறிக்கின்றார்.

ஏதாநி ஹவா அம்ருதஸ்ய நாமதேயாநி
ஏதைர்ஹ வா அம்ருதோ பவதி||

(இ—ள்) இவைகளன்றோ அமிர்தனுக்கு நாமதேயங்கள் இவைகளாலன்றோ அமிர்தனாவான். எ—று.

(வி—ரை.) ஈண்டு அமிர்தனென்றது சவிசேஷபிரம்ம சொரூபவாசகமாதலால் சிவமூர்த்தத்தின்மேனின்றது. 'அம்ருதோ ஹிரண்ய:, ப்ராணஸ்ஸர்வ அம்ருதஸ்ஸத்ய:' ஸஷ்டந்தாந்தரர்தாத்ஸ்ருத:, = அமிர்தன் ஹிரண்யயன், அ

மிர்தன் ‘புத்ல்வர்கள்கேண்மின், இந்தவுனதான்மாவந்தர்யாமி யமி ர்தனும்’ என்பதாதி பலவிடங்களில் அமிர்தனென்று சவிசே ஷப்பரம்மமே வழங்கப்பட்டது. ஆதலாலதனைச் சிவபர மென் றேரும், அற்றேல் அமிர்தனென்ற சொல்லுக்கு நாரணன் நான் முகன்முதலிய வேனயக்கடவுளரும் சவிசேஷப்பிரமசொரூபங்க ளேயாதலாலவர்களை யதன்பொருளெனக்கொள்வதிற் குற்றமே துளதெனின், இக்கூற்றுபிரகரணமறியாப்பேதைமையாணிகழ்ந்த தென்க പരാമൃതാത് പരിമുച്യന്തി സർവേ = அமிர்தத்தைக் கடந்தெல்லோரும் முக்தியடைவார்கள்’ അമൃതസ്യ പരം സേതും = அமிர்தத்துக்கப்பாலுள்ளவனை ക്ഷരം ത്വവിദ്യാ ഹ്യമൃതം തു വിദ്യാ = க்ஷரம் வித்தையாமமிர்தம் வித்தையாம் என்றற்றொடக்கத்தனவான வாக்யங்களின் மாயையினிடத்தும் അസ്മിന്നേ അമൃതം ബ്രഹ്മണി = யானமிர்தத்தில், அமிர்தம் பிரம்மத்தினிடத்து ക്ഷരം പ്രധാനമമൃതാക്ഷരം = க்ஷரம்பிர தானம், அமிர்தனக்ஷரமாம்’ என்பதாதி விவகாரங்களிற் பிரத் தியகான்மாவிடத்தும், ഈശം തം ജ്ഞാത്വാമൃതാ ഭവന്തി = அவ்வீசனைய றிந்தவரமிர்தராவார் അഥ മർത്ത്യോഽമൃതോ ഭവതി = இனிமர்த் தியனுமமிருதனுவான்’ യ ഏതദ്വിദുരമൃതാസ്തേ ഭവന്തി = எவரிவனை யறிவாரவரமிர்தராவார் எனபதாதிவிடங்களில் முக்த ர்களிடத்தும், ഇദമമൃതം = இஃதமிர்தமென்பதாதி விடங்களி ற்பிரம்மத்தினிடத்தும், வினியோகிக்கப்பட்ட இவ்வமிர்தசப்தத் திற்கு நாராயணோபநிடத முதலிய வுபநிடதங்கள் நாரா யணன் முதலியோரைப் பொருளெனக் குறித்தபோதும் இங்கு சதவுருத்திரீயத்தின் பொருளாயவமிர்தனென்பவன் சிவனின்றி மற்றெவனுமாகானென்க. அக்கினிகாண்டத்தில் சதவுருத்திரீ யம்படிக்கப்படுதலின், அவ்வக்கினியே விப்பதப்பொருளாகாதோ வெனின், பளாபளா டணடிதமணீ?? நின்மேதைக்குநமது மேதை யேயுமாகுமாமன்றி மற்றேதுமாகாது. மகாக்னிசயனத்தில் சய னபரிபூர்த்தியானவுடன் இறுதியிலிட்டகையில் அக்கினியை யுத் தேசித்து ஹோமஞ்செய்வதிலிச்சதருத்திரீயம் வினியோகிக்கப்ப ட்டமையின் இதக்கினி பரமாயின், அந்தோ?! அதே இஷ்ட

கைச் சிதிமை யுபஸ்தானஞ்செய்வதில் வினியோகிக்கப்படும்
[illegible] வைஸ்ரவணாய புருடசூக்த
த்தாற் குபேரனை பூசிக்க என்று குபேரபூஜையின் வினியோகி
க்கப் படும்உள்ள புருடசூக்தமட்டும் எக்காரணத்தாற் பிரம்ம
காண்டமாயது? அம்மட்டோடொழியாது, அம்புயக் கண்ணனுக்
குமஃதுரியதாமெனறீரே அஃது மட்டும் மிக்கப்பொருத்தமுடை
யதோ? அங்ஙனங்கூறுமிடத்து இங்குரைத்த ஞாயத்தைமறந்தீ
ரோ? இற்க காயத்ரீ மா மந்திரமும் அக்கினி சயனோபஸ்தானம்,
சூரியோபஸ்தான முதலிய வற்றில் வினியோகிக்கப்படுதலால்
அதுவும் அங்ஙனமே யக்கினிபரமும் சூரியபரமுமாமோ? வெகு
நன்கு!! வேதார்த்தங்களையெடுத்துரைப்பதினீவிர் வெகுசமர்த்
தர். ஐயன்மீர் மேற்கண்டகாரணங்களா லதர்வசிகாவிலாச நூலு
டையாராயவைணவர்கொள்கை மறுக்கப்பட்டது. காயத்ரீ மாம
ந்திரத்தையெல்லாவேதங்களு மக்கினியாதித்தன் முதலிய தேவர்
வழிபாட்டில் வினியோகித்தபோதினும் அஃது பிரம்ம மந்திரமே
யாவதுபோலிச் சதருத்ரீயமுமமிர்த பரப்பிரம்ம ரூபனாக பரசிவ
னையே நிரூபிப்பதாம். ஆதலாற்றான் ஆசிரியர் யாக்ஞவல்கியர்
அன்றே' வென்ற பெருவழக்கைக் குறிக்குஞ் சொல்லையினுப
யோகித்தனர். அக்னியிடத்துச் சதருத்ரீய முபயோகிக்கப்படுத்
துமிடத்திலும், [illegible] ருத்திரனன்றோ வி
வனிங்கக்னி ரூபனாயுள்ளவனென்று, மந்தமதிகளுக்குத் தோன்
றுஞ் சங்கையொழிக்க அவ்வக்கினியிடத்து ருத்திரதாதாத்மியம்
அந்தச் சுருதியாலே குறிக்கப்பட்டது. மாபாரதத்திற் துரோணப
ர்வஞ் சதருத்ரீயாத்தியாயத்திலும் [illegible]
[illegible] |
[illegible] | 'இவருக்கெல்லாலோகங்களிலு
மனேக நாமதேயங்கள் நற்பொருளுள்ளனவாகி (இடுகுறியல்லா
மல்) இருப்பனவாம்போல வேதத்திலும் இவனது திவ்யநாமங்க
ளடங்கிய சதருத்ரீயமென்ற வுத்தமபாகம் படிக்கப்பட்டது. கூர்ம
புராணத்தில் [illegible]
[illegible] |

[illegible] || உபமமற்ற மகாபுருஷ இவைகளென்று ரகசியநாமங்கள்; இவைகளைக்கேள் இவைகளெல்லாவேதங்களிலு மமைந்தன. சம்சாரமொழிக்கு மாற்றலுள்ளன. இந்நாமதேயங்களைச் சொல்லி நாடோறுமென்னை நீவணங்குவாயாக. என்னிடத்தேயன்புற்றவனாய் வேறுயாதுஞ்சிந்தியாது சுசியாய்சர்வேதசாரமான சதருத்திரீயாத்தியாத்தை ஜபஞ்செய்திடுவாய். ஆகாரநியமமுள்ளவனாய்த் திருநீரணிந்துஏகாக்ரசித்தனாய்ப்பிரம்மப்பிரதிபாதகமான இச்சதருத்திரீயத்தை யவன்மரணம்வரை ஜபிப்பான்; அவன் கருதியபரமகதியைத்தருவான். என்றுசதருத்திரீயம் சிவநாமதேய பரிபூர்ணமெனக்குறிக்கப்பட்டது. பராசரபுராணத்தில் [illegible] | [illegible] || [illegible] | [illegible] || ஜாபாலோபநிடதமென்னுமுத்தம வுபநிடதமானதுஎனது சிவஞானஞ்சித்திப்பதற்காகப்பிராணிகளிடத்துக்குருணையாய தனையடையும் முக்கியசாதனங்களை (ஒருமாறு) குறித்தது. அவிமுக்தமென்றவெனதுக்ஷேத்திரம் (வழிபாட்டுக் சேர்ந்துக்கொள்ளவேண்டியக்ஷேத்திரங்களில்முக்கியம்) எனது பெயருக்குட் சுபமாய்ச்சிறந்தபெயர் (அங்குபதேசிக்கப்படும் பிரணவமல்லதுபஞ்சாட்சரமாம். சதருத்திரீயத்தையிடையறாதுஜபித்தல் (காயமனோவியாபாரங்களை சிவன்வழிப்படுத்தல்.) அந்தனை முத்தமசன்னியாசம் (குடீசக, பகூதக, ஹம்ஸசன்னியாசங்களைக்கடந்த பரமஹம்சசன்னியாசம்) என்பனவாம். என்று இவ்வுபநிடதத்தில் சர்வசாரம் ஒருவாறுசங்கிரகிக்கப்பட்டது. ஸ்ரீபோதாயனகௌதமாதிசூத்திரக்காரர்களும் ஸ்ரீருத்திரத்தை மோட்சசாதனசிவாராதனத்தில் விநியோகித்ததுமன்றி லகுநியாசமகாநியாசங்களில்இச்சதருத்திரீயத்துக்கு அங்கமாகவனேக வேதாந்த பூஷ

சகலவைதிகமந்திரங்களையுமமைத்தருளினர். சிவநாமசங்கீர்த்தனத்தானும் அவனது திவ்யத்திருமேனியைத்தியானித்தலானும், சாரூப்பிய முக்திகூடுமென்றும், இதுவே அவிமுக்தோபாஸ்தியாமென்றும் இதன்பயன், சரமகாலத்தில சிவகுருமுகத்தால் தாரகவித்தையையடைவதாமென்றும் அதனால்சவிசேஷப்பிரம்மசாரூப்பியம் இடைத்தபிறகு நிர்விசேஷசைதன்னியைக்கிய சித்தியுண்டாமெனவும், யாக்ஞவல்கியதிவ்வியோபதேசத்தின் முடிந்தகருத்தாம். ஸ்ரீருத்திரமூர்த்தி மோட்சதானகர்த்தாவென்பது உதாஹ்ருதங்கள் [illegible] | அமிர்தத்தன்மையதீசானனே; மோட்சத்துக்கு இவனேப்பிரவர்த்தகன் என்பதாதிசுருதிகளாற்சித்தித்ததாம். ஆதலாற்றான் ஆசிரியர் போதாயனர் ஆன்மாக்களையாட்கொள்ளும் ஆசிரியன் சரீரத்தில் சிவனைப்பூசிக்கவேண்டுமென்றுவிதித்தனர். அவ்விதியையேயன்றுபோர்க்களத்திலர்ச்சுனனனுட்டிப்பவனாய்த் தமக்குக்கீதோபதேசஞ்செய்தருளிய கண்ணன் றிருமேனியிற்றஞ்சிவபூஜையை முடித்துக்கொண்டானென மாபாரதங்கூறியது. அதனையே யனுபவித்தார் சர்வ வேதவியக்கியானஞ்செய்த மாதவாசாரியரும் எல்லாவேதபாடியக்காரர்களும் ருத்திர என்ற சொல்லுக்கே மோட்சதாதாவென்ற பொருளைக்காட்டியிருக்கின்றார்கள். சதருத்திரீயத்தின் கண் பாரிபாயவென்ற சொல்லுக்குப்பொருளிடும்பொழுது எல்லாப்பாடியக்காரரும் மோட்சதாதாவென்கிறபொருளிட்டார்கள். இதனாற்சிலபுராணவாக்கியங்களைக்கொண்டு வேறுதேவர்களுக்கே மோட்சதானசாமர்த்திய மென்றபிரர்வாதம்மறுக்கப்பட்டதறிக. ஸ்ரீபரமேச்சுரநாமதேயங்களைஜபித்தல் வேதத்தால்விதிக்கப்பட்டது.

அவ்விதவேதங்களில்விரிந்துகிடைப்பனவாயினும். இங்கு அவற்றுட்சிலவற்றைக்காட்டுவோம். ரிக்குவேதத்தில் [illegible] | [illegible] ॥ =தேவதைகளுக்குத்தந்தையாகிய ஈசனையுத்தேசித்து இவ்வாக்குகளைச்சொல்லுவோம். ஸ்திபதனுவாகியருத்திரனையுத்தேசித்திவ்வாக்குகளைச்சொல்லுங்கள், பிரகாசிக்கும்ருத்திரநாமதேயங்களைச்சொல்லுவோம் என்

பதாதி பல்மந்திரங்களுள. சுக்லயசுர்வேதத்துக்கிவ்வுபநிடதமும் கிருஷ்ணயசுர்வேதத்துக்குக் கைவல்யோபநிடதமும். சிவநாமதேயங்களடங்கிய ஸ்ரீ சதருத்ரீயத்தை மிகப்புகழ்ந்தன வென்பது ஸ்பஷ்டம். மற்று அதர்வணசங்கிதையில் பதினோராங்காண்டம் இரண்டாமத்தியாயமாகிய ருத்திராத்தியாயத்தில் ஓராவர உஜிஹ்வயா நம் = எச்சமயமும் நாவினாலுடையப்படும் ஈசனை மறவாதே' யென்றும், வேறுமனேக வாக்கியங்கள் கர்மஞ்ஞானவுபாசனாகாண்டங்களிலுள்ளன. இவற்றின் விரிவையெமது சிவசிந்தன சந்தானத்திற்காணலாம்.

மூன்றாங் கண்டம் முற்றிற்று

---o---

அவதரணிகை

இங்ஙனம் ஸ்ரீ ருத்திரோபநிடதத்தின் பெருமையளவிறந்ததாகக் கூறிநின்ற யாக்ஞவல்கியர் அவிமுக்தோபாஸ்திக்குவதிகாரிகளைக்குறிக்குமிடம் இதே சந்தியைப் பிரமநிட்டர்களுபாசிப்பார்களென்று பாஹ்ய சந்தியாவந்தனத்திலனதிகாரிகளான சிலரைக்குறித்தமையால் அதன் விரிவை ஜனகர் கேட்கின்றார்.

அத ஹைநம் ஜநகோ வைதேஹோ யாஜ்ஞவல்க்யம்
உபஸமேத்யோவாச, பகவந் ஸந்ந்யாஸம்
அநுப்ரூஹீதி

(இ—ள்) இனி விதேக குலத்தில் பிறந்த ஜனகமகாராஜன் யாக்ஞவல்கியரை வழிபட்டு ஓபகவ! சன்னியாசவிதியை யுபதேசித்தருள்வாயென வினவினான்.

(வி—ரை) இங்கு ஜனகன் யாக்ஞவல்கியரை வழிபட்டு வினவினான், என்றமையால் முன்னரும் பின்னரும் யாக்ஞவல்கியரிடத்து வினா நிகழ்த்தியவரான பிருகஸ்பதி, அத்திரி பிரமசாரிகள் யாக்ஞவல்கியருக்குச் சீடர்களல்லவென்று ஏற்படுகிறது. அல்லது அவர்கள் ஒருவாறறிந்தவிஷயத்தை ய மீண்டும் லோ

சோபகாரார்த்தமாய் வினவினாரென்றும், இவர் அவ்விஷயத்தைப் புதிதாயறிய வினவினாரென்றும், பொருள் கொள்ளினும் கொள்ளலாம். உண்மையில் ஓபகவவென்று ஆசிரியர்க்குரியபடி விளித்தமையானும். வழிபாட்டைக் குறித்தமையாலும், இவர் சீடரென்றும் மற்றவர் குணமாகரென்றும் கொள்வதே யுசிதமாம். யாம்பிருகஸ்பதி முதலியோரைச் சீடராகவேற்றுரையிட்டதுஅப்பியுபேத்தியவாதம் (ஒப்பியொன்றைவாதித்தல்) ஆமெனக.

அவதாரணிகை

யாக்ஞவல்கியர் விடையைக் குறிக்கின்றார்

𑌸𑌹𑍋𑌵𑌾𑌚𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂𑌸𑌮𑌾𑌪𑍍𑌯 𑌗𑍃𑌹𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌗𑍃𑌹𑌾𑌦𑍍𑌵𑌨𑍀 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 |
𑌯𑌦𑌿𑌵𑍇𑌤𑌰𑌥𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 |
𑌗𑍃𑌹𑌾𑌦𑍍𑌵𑌾𑌵𑌨𑌾𑌦𑍍𑌵𑌾 ||
𑌅𑌥𑌪𑍁𑌨𑌰𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑌾 𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑌾 |
𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋𑌵𑌾𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋𑌵𑌾 |
𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑌨𑌗𑍍𑌨𑌿𑌕𑍋𑌵𑌾 |
𑌯𑌦𑌹𑌰𑍇𑌵𑌵𑌿𑌰𑌜𑍇𑌤𑍍 |
𑌤𑌦𑌹𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 |

(இ—ள்) யாக்ஞவல்கிய ருபதேசிக்கின்றார். பிரம்மசரியத்தைப் பூர்த்திசெய்து கிருகஸ்தாச்சிரமியாகவேண்டும் கிருஹஸ்தாச்சிரமத்திலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையடைந்து சன்னியாசத்தைப் பெறவேண்டும். அப்படிக் கில்லாமற்போனால் பிரமசரியத்திலிருந்தே சன்னியாசம் பெறலாம். கிருகஸ்தாச்சிரமத்திலிருந்தாவது, வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருந்தாவதும்பெறலாம்இனிமேல், விரதமுள்ளவனானாலும் விரதமில்லாதவனானாலும் சமாவர்த்தம் செய்து

கொண்டவனானாலும், அன்னமில்லாதவனானாலும், அக்னியுள்ளவனானாலும், அக்னியில்லாதவனானாலும் எந்தக்கணத்தில் வைராக்கியமுண்டாகும் அந்தக்கணத்திலேயே சன்னியாசம்பெறவேண்டும். ௭—ஆ

(வி—ரை). இங்கு முதலில் கிரமசன்னியாசமும், பிறகு ஆபத்து சன்னியாசமுஞ் சொல்லப்படும். கிரமசன்னியாசமும் விவிதிஷாசன்னியாசமெனவும், வித்வத் சன்னியாசமெனவுமிரு வகைப்படுமாதலால், முறையே அவைகளையிந்த க்கண்டத்தில்நிரூபிக்கின்றார் பிரமசரியத்தை ப்பூர்த்திசெய்து என்பதாதியால், வேதங்களெல்லாம் [illegible] =மூன்று வகை தர்மங்களைகளென்றும், மற்றும்பலவிதமாய்முதன் மூவாச்சிரமங்களையும்,புகழ்கின்றன ஸ்மிருதிகர்த்தர்களும்,முக்கியகற்பமாய் கிரமசன்னியாசத்தையே நிரூபிக்கின்றனர் மனு, வியாசர், பராசரர்முதலியோர் முறையேநான்காச்சிரமங்களையு மனுட்டிக்கும்படிநிருபித்தனர். [illegible]

=மூன்றுகடன்களை (இருடிருணநிவிர்த்தி பிரம்மசரியத்தால், தேவருண நிவிர்த்தியஞ்ஞத்தால், பிதுருணநிவிர்த்தி சந்தானத்தால்,) யும் ஒழித்துப்பிறகே மோட்சத்தில் மனதைச் செலுத்த

அ

ஒ

வேண்டும். (க) வேதங்களை விதிப்படி அத்தியயனம்செய்து; தர்மத்தினால் புத்திரர்களைப்பெற்று, சக்தியளவுயாகத்தைச் செய்து பிறகு மோட்சத்தில் மனதைச் செலுத்தவேண்டும். வேதாத்தியயனம் செய்து தவஞ்செய்கிறவனும், புத்திரர்களைப்பெற்று அதிதிகளுக்கு அன்னதானம் செய்பவனும், அக்னியுள்ளவனாகிச் சக்தியுள்ளபடி யாகம் செய்கிறவனும் யிருந்து பிறகு மோட்சத்தின், மனதைச் செலுத்தவேணடுமே யல்லாமல் வேறுவழியில்லை. (உ) ஆச்சிரமத்தை விட்டு ஆச்சிரமம் தாண்டி ஓமங்களை யெல்லாஞ்செய்து, இந்திரியஜயமடைந்து பிக்ஷையிடுதல், பலிகொடுத்தல் முதலியவற்றால் சிரமப்பட்டவனாய் சன்னியாசத்தைப் பெற்று விருத்தியடைவான். (ங) ஆயுளின் மூன்றும்பாகத்தை வான்பிரஸ்தாச்சிரமத்திற் செலவழித்து நான்காம்பாகத்தை சர்வசங்கபரித்தியாகமென்ற சன்னியாசத்தால் விருத்தியடைவான். (ச) இப்படியே ஆயுளின் மூன்றும்பாகத்தைக் |வானப்பிரஸ்தாச்சிரமத்தில் கழித்துவிட்டு நாலாம்பாகத்தைக் கிரமமாயச் சன்னியாசத்திற் செலுத்தவேண்டியது." (ரு) என்பதாதி பலவசனங்கள் ஸ்மிருதிகளிற் காணப்படுகின்றன. அவைகளுக் கெல்லாமிதுவே மூலமாம். இல்லாவிடிலென்று தொடங்கிய மேற்பாகம், ஜன்மாந்தர சுகிருதவசத்தாலி ஹலோகத்திற் பூர்ணவைராக்கிய சம்பன்னராய்ப்பிறப்பவரையுத்தேசித்துப் பிறந்த வசனங்களடங்கியது. அவைதுறவுமேலிட்டாற் கிருஹஸ்தாச்சிரமத்தை விரும்பாத வுத்தமாதிகாரிக்கே யுசிதமாம். அற்றேல், பிரமசரியத்தினின்று முறைப்படி மூன்றாச்சிரமங்களையுங்கடவாது, துறவடைவோர் குற்றமுள்ளவராவார். என்றுகூறும்: ருணாநி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயேத் | அநபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமாநோ வ்ரஜத்யத: ||க|| அநதீத்ய த்விஜோ வேதாநநுத்பாத்ய ததா ஸுதாந் | அநிஷ்ட்வா சைவ யஜ்ஞைச்ச மோக்ஷமிச்சந் வ்ரஜத்யத: ||உ|| = மேற்கண்ட மூக்கடன்களை யொழிக்காது சன்னியாசத்தையடைகிறவன் நரகத்தையடைவான் (க) வேதாத்தியயனம் செய்யாமலும், புத்திரர்களைப்பெறாமலும், சக்தியுள்ளளவு யாகத்தைச் செய்யாமலும், மோட்சத்தை யிச்சிப்பவன் நரகமடைவான்" இவைபோன்ற வசனங்கள் பயனற்றவைகளோ வெனின், அன்று. இவைகளெல்லாம் முறைப்படியனுஷ்டிக்கப்படும்

மூன்றாச்ரமங்களையும் அதிக்க வெழுந்தனவே யன்றி விதிவாக்கியங்களல்ல. அனேக ஸ்மிருதிகளில் [illegible] ॥ ௧ ॥ [illegible] ॥ ௨ ॥ [illegible] ॥ ௩ ॥ [illegible] ॥ ௪ ॥ [illegible] ॥ ௫ ॥ [illegible] ॥ ௬ ॥ [illegible] ॥ ௭ ॥ [illegible] ॥ ௮ ॥ [illegible] ॥ ௯ ॥ [illegible] ॥ [illegible] ॥ = வேதவிரதங்களை முடித்தவுடன் வித்வான் மோட்சத்தை யடையவேண்டும். ஸ்தாவரஜங்கமமான எல்லாப் பூதங்களிலும் சமபாவனையுள்ள ஓர்பிரமசாரியாயுள்ளவன்மோட்சத்தையடையவேண்டும்(௧)ஞான விஞ்ஞானங்களை அடைந்து பரமான வைராக்கியத்தை யடைந்தவன் மோட்சத்தையடைய விருப்பமுள்ளவன் பிரம்மசரியாச்சிரமத்திலிருந்தே சன்னியாசத்தையடையவேண்டியாது. (௨) பிரம்மசாரியாவது கிருகஸ்தனாவது, வானப்பிரஸ்தனாவது; சகலமான காமங்களினின்று விரக்திபுண்டானபோது சன்னியாசத்தை யடையவேண்டியது. (௩) பிரம்மசரியத்திலிருந்தாவது, கிரஸ்தாச்சிரமத்திலிருந்தாவது, வானப்பிரஸ்தாச்சிரமத்திலிருந்தாவது சன்னியாசத்தைப் பெறலாம். (௪) பிரமசரியத்திலிருந்தே சன்னியாசத்தைப் பெறலாமென்

ரூர் பெரியோர். (௬) அந்தபிரமசாரி இச்சைப்படி யாச்சிரம்ம் பெறலாமென்றூர்சிலர். (௬|) பிரமசரியத்தை முடித்த பிறகுதான் இச்சிந்த்யாச்சிரமத்தைப்பெறலாம், (எ) பிரமசாரியாவது சந்நியாசம் பெறலாம், கிருகஸ்தனுவது சன்னியாசம் பெறலாம்; வானப்பிரஸ்தனுவது சன்னியாசம் பெறலாம் ரோகியாவது துக்கமுடையவனுவது சன்னியாசம்பெறலாம். (அ) பிரம்மசாரியாவது, கிருகஸ்தனுவது, வானப்பிரஸ்தனுவது, லௌகிகாக்னியை உதராக்னியுடன் சேர்க்கவேண்டும் (சன்னியாசம் பெறவேண்டும்) (௯) பிரமசாரியாவது, கிருகஸ்தனுவது, வானப்பிரஸ்தனுவது, எப்போதுவிரக்தியுண்டாயிற்றே, அப்போதே உத்தம விருத்தியாகிய சன்னியாசம் பெறவேண்டும். (௰) இப்படிக்குப்பலவசனங்கள் தீவ்ரவைராக்கிய சம்பன்னர்களுக்கு சன்னியாசத்தில் முக்கியாதிகாரத்தைக்காட்டுகின்றமையால் அவ்விஷயத்தில் விரோதிக்கும்வசனங்களெல்லாம் புகழ்மொழிகளெனக்கொள்ளவேண்டுவதே மரபாம். 'விரதமில்லாதவ' னென்றது, சர்வவேத விரதங்களையும் பூர்ணமாக வனுட்டிக்காதவனையே. அங்ஙனமில்லாது 'விரதமில்லாதவ' னென்றதற்கு பிரமசாரியென்று பொருள் கொண்டால் அது விபரீதமாம். ஸ்நாதக (சமாவர்த்த) னம், செய்துகொள்ளாதவனென்றது விரதசமாவர்த்தனத்தை முறைப்படி செய்து கொள்ளாதவனையே குறித்தது. அக்னியைவிட்டவனென்பவன், பனிரெண்டு தினங்களக்னிஹோத்திரஞ்செய்தவனுவது, சங்கடம்முதலானகாலங்களில் அக்னியைவிட்டவனுவதாம். அக்னியில்லாதவனென்றது, விதுரன், அனுகிதாக்னியாம் இவ்வளவால் பூர்வஜன்ம சுகிர்தவசத்தால் வைராக்கியமுள்ளவனுக்கு அவ்வைராக்கியமுதித்தபெருங் கணத்திற்றனே சன்னியாசஞ் செய்துகொள்ளவேண்டுமென்பது விதி.

அவதரணிகை

மேற்கண்டசன்னியாசங்களையுடையவேண்டிய விதியைக் கூறுகின்றூர்.-

[illegible] ।
[illegible] ।

[illegible]
[illegible]

(இ—ள்) இதில் 'பிராஜாபத்ய' மென்றஇஷ்டியைப்பலர் செய்கிறார்கள். அஃதங்ஙனஞ் செய்யக்கூடாது. ஆக்கினேயமென்ற இஷ்டியையே செய்யவேண்டும். அக்னி பிராணரூபனாதலா லவ்விஷ்டியைச் செய்தால் பிராணேட்டியைச்செய்தவனாவான். (என்பது)

(வி—ரை) ஆக்னேயஇஷ்டியையே செய்யவேண்டுமென்றது யாக்ஞவல்கியர்சம்மதம். ஆயின், இதுகாத்தியாயன சூத்திரஸ்தர்களுக்கேயன்றி மற்றவருக்கு அவரவர்சூத்திரத்திற்சொல்லியபடியேயனுட்டிக்கவேண்டுமாம். P. N. Parasuraman

அவதாரணிகை

அதன்மேன் முறையைக்கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ—ள்) பிறகுத்ரைதாதவீயேஷ்டியைச் செய்யவேண்டும். இதனாலே ஸத்வம், ரஜசு, தமசு என்ற மூன்றுதாதுக்களும் (ஜனிக்கப்படும்-சமைப்படும்) 'அயந்தே' யென்னுந்தொடங்கியமந்திரத்தால் அக்னியை மூகர்ந்து பார்க்கவேண்டும். அக்னிக்குப்பிராணனே யோனியாதலால் பிராணனேயடைந்திடுவாயென பிராணனிடத்தில் அக்னியை ஓமஞ் செய்யவேண்டும். (என்பது)

(வி—ரை) இங்கக்னியென்றது பிரம்மசாரி, சமாவர்த்தன், அக்னியைவிட்டவன், அக்னியில்லாதவன் இவர்களுக்கு லௌகிகாக்னியும், அநுகிதாக்னிக்கு ஔபாசனாக்னியும், ஆஹிதாக்னிக்கு வைதிகாக்னியுமாம். பிராஜாபத்தியேஷ்டி, ஆக்னேயீஷ்டி, த்ரைதாதவீயேஷ்டிகள் ஆஹிதாக்னிக்கே.

அவதரணிகை

ஆஹிதாக்னிவிஷயத்தில் அரணியைக்கடைந்தெடுக்குமக்னியேமுக்கியம். இல்லாதசங்கடஸ்தானத்திலும் தத்தமக்னிகளை கிரமமாய்வைத்துக்கொள்ளாது காரணவிசேஷத்தால்அக்னியை விட்டிருப்பவர்களுக்கும் அக்னியைத்தாரணமாகவைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லாதவர்களுக்கும்விதி கூறுகின்றார்.

[illegible]
[illegible] |

(இ—ள்) இங்ஙனமேயன்றோ சொல்லுகிறார்கிராமத்திலிருந்தக்னியைக்கொண்டுவந்து முன்னர் நிரூபித்த மந்திரப்படி முகர்ந்து பார்க்கவேண்டும். (என்பது)

அவதரணிகை

அக்னியகப்படாதவிடத்தில்விதி கூறுகின்றார்.

யத்³யக்³நிம் ந விந்தே³த³ப்ஸு ஜுஹுயாத்
ஆபோ வை ஸர்வா தே³வதா: ஸர்வா தே³வ
தாஸ்வப்ஸு ஹுதஶேஷம் ப்ரா
ஶ்நீயாத் ||

(இ—ள்) அக்னியகப்படாதவரை ஜலத்தில் ஹோமஞ்செய்யவேண்டும். ஜலம்எல்லாதேவதைகளின் சொரூபமுள்ளதாம். எல்லா தேவதைகளுக்கும் (ஸ்வாஹா)காரத்தால் அதில்ஹோமஞ்செய்து அதனை(சிறிது) எடுத்து உட்கொள்ளவேண்டும். (என்பது)

அவதாரணிகை

முக்கியாமுக்கிய பக்ஷங்களுடன் உபசங்கரிக்கின்றார்.

𑌸𑌾𑌜𑍍𑌯𑌂 𑌹𑌵𑌿𑌰𑌨𑌾𑌮𑌯𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌃
𑌤𑍍𑌰𑌯𑍍𑌯𑍈𑌵𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌤𑌦𑍁𑌪𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌂

(இ—ள்) ஆஜ்யத்துடன் கூடிய ஹவிஸே சுகந்தருவ தாம். மோக்ஷமந்திரங்களால் வேதங்களால் அடையும் பய னைப்பெறுவான்- அதுவே பிரம்மமாம், அதுவே உபாஸிக்க க்கடவதாம்.

(வி—ரை) மோக்ஷமந்திரங்கள் பிரணவாதிகள். அது என் றது சன்னியாஸாச்சிரமத்தையாம்,

அவதாரணிகை

இனி ஜனகர் ஆசிரியனுபதேசத்தைக் கேட்டமுறையுடன் கண்டத்தை முடிக்கின்றார்.

𑌏𑌵𑌮𑍇𑌵𑍈𑌤𑌦𑍍𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌿𑌤𑌿 𑌵𑍈 𑌯𑌾𑌜𑍍𑌞𑌵𑌲𑍍𑌕𑍍𑌯𑌃 ।

(இ—ள்) ஓ பகவானே இப்படியேதானே (என்றார்) யாக்ஞவல்கியர் (என்பது)

(வி—ரை) ஓ பகவானே என்பது முதல் ஜனகவாக்கியம் இறுதியிலுள்ள வாக்கியம் வேதபுருஷன் வாக்கியம்.

நான்காம் கண்டம் முற்றிற்று.

ஜாபாலோபநிஷத்வியாக்கியா

அவதரணிகை

இனி அத்திரிபகவான் யாக்ஞவல்கியரை ஸந்நியாஸிகளின் இலக்கணத்தை வினவும் முறையில் அதனை விளக்குகின்றார்.

அத ஹைநமத்ரி: பப்ரச்ச யாஜ்ஞவல்க்யம் ப்ருச்சாமி த்வா யாஜ்ஞவல்க்ய கதம் அயஜ்ஞோபவீதீ ப்ராஹ்மண இதி ॥

(இ—ள்) இனி அத்திரி யாக்ஞவல்கியரைக் கேட்டார் ஓ யாக்ஞவல்கிய உம்மை யான் கேட்டதாவது; யக்ஞோபவீதமுள்ளவன்பிராமணன் — (என்று)

(வி—ரை) அக்னி முதலியவற்றை ஆத்மசமாரோபணஞ் செய்யவேண்டும். என்று ஸந்நியாசவிதி கூறப்பட்டமையால் யக்ஞோபவீதந்தரிக்கும் பொழுது யஜ்ஞஸ்யத்வோபவீதேநோபநஹ்யாமி யக்ஞத்தின் உபவீதத்தைத் தரிப்பேன் என்றமந்திரம் உச்சரிக்கப்படுதலாலும் யக்ஞோபவீதியில் யஜ்ஞஸ்ய ப்ரஸ்ருத்யை யக்ஞத்தில் (அதிகார) சித்திக்காக என்று யக்ஞாதிகாரமெனப்படும் கர்மாதிகாரத்துக்காகவே யக்ஞோபவீதம் விதிக்கப்படுதலாலும், அஃது யக்ஞாதிகர்மங்களுக்குபயோகமான அக்னியில்லாத அந்த்யாச்ரமிக்கு அமையாது பற்றியும் யக்ஞோபவீதம் இல்லாதவர் பிராம்மணர் ஆவரெவ்வாற்றானும் இயைபியதாகையாலும் இவ்வந்த்யாச்ரமியை யக்ஞோபவீதமுள்ளப்பிராமணன் என்பது எதைக்கொண்டு என்று வினவியது. பொதுத்தன்மையில்லாவிடம் விசேடத்தன்மையிராது. மண்தன்மையில்லாவிடம் குடத்தன்மை கூடாதுபோல இங்ஙனமாக பிராம்மணனுக்குள்ள பொதுத்தன்மையாகிய கர்மாங்கமான சிகை யக்ஞோபவீதங்களில்லாதவழி அவரை பிராம்மணசிரேஷ்டராகிய உத்தமாச்ரமிகளென்பது எங்ஙனம் ஒவ்வும் ஸ்வாத்யாயோ யஜ்ஞோபவீதிநாத்யேய: ஆகையால் யக்ஞோபவீதமுள்ளவனே அத்யயனம் செய்யவேண்டும் என்றவிதியும் அஃதில்லாதவனுக்கு வேதமந்திரஜபாதிகாரத்தை விலக்கியதாகவே எப்படி அந்த்யாச்ரமிகள் சர்வவேதசாரங்களான பிரணவ ஸ்ரீருத்திரங்களை ஜபிக்கக்கூடும் என்று அத்ரியென்பவர் வினவியதின் கருத்து.

அவதாரணிகை

அவ்வினாவுக்கு யாக்ஞவல்கியர் மறுமொழிகூறுவார்

ஸஹோவாச யாஜ்ஞவல்க்ய இதமேவாஸ்ய தத்
யஜ்ஞோபவீதம் ய ஆத்மா

(இ—ள்) அந்தயாக்ஞவல்கியர் விடையளித்தார் இதுவேயிவருக்கு யஞ்ஞோபவீதமாம். எது ஆத்மா எனப்படும்.

(வி—ரை) ப்ரம்மோபனிடதம் முதலியசுருதிமுடிகள் உத்தமாதிகாரியான அத்தியாச்சிரமிக்கு ஞானமே சிகையும் யஞ்ஞோபவீதமும் ஆம் என்றுநிரூபிக்கின்றன. ஆதலால் கன்மாங்கமாக வேற்பட்ட நூன்மய யஞ்ஞோபவீதம்கேவலகன்மபத்தர்களான முதல் மூவ்வாச்சிரமிகளுக்கும் சிறிதுசுருமசம்பந்தமுள்ள குடீசகபகூதகசன்னியாசிகளுக்குமேயன்றி கேவலப்பிரம்மாச்சிரமம், மோக்ஷாச்சிரமம் என்பதாதி அற்புதச் சொற்களால் வேதங்களும் ஸ்மிருதிகளும், வைராக்யமூலபரமஹம்சாச்சிரமிகளுக்குள்ளதல்லவாம். அற்றேல் யஞ்ஞாதிகாரமுள்ளவனே பிராமணன் என்றும் அக்னியே அந்தணர்குறியதெய்வம் என்றதும் அவலமேயெனின் அற்றன்று முன்னரேவெளியில் உள்ள பஞ்சாக்னிகளையுந்தனது சரீரத்தேசேர்த்துதியானயஞ்ஞம் செய்யும் அந்தர்முகருக்கு வெளிப்படையான அவ்வித்யாகார்யயஞ்ஞோபவீதமில்லையே யன்றி வித்யாமயமென வுபசரிக்கப்படும் ஞானயஞ்ஞோபவீதம் அவனுக்கேஉண்டாகையால் அவரே முக்யப்பிராமணர் என்பதிற்றடையில்லை. இங்குயக்ஞோபவீதத்துக்கேற்பட்ட கேள்வி மறுமொழிகள் சிகைகாயத்திரீ முதலியமற்றயவேதோக்தபிராமணலக்ஷணங்கட்கும் குறிப்பானதேயென்க.

அவதாரணிகை

வெளியக்ஞோபவீதமில்லாத ஞானயக்ஞோபவீதிகளுக்கு எல்லாக்கிரியைகளும் அக்னியின்மையாலிராலும் நின்மலமான மனதாலுமேசாதிக்கக்கூடியதென்கிறார்.

அப: ப்ராஸ்யாசம்யாயம் விதி: பரிவ்ராஜ
காநாம் |

(இ—ள்) நீரைக் குடித்தல் ஆசமனம் செய்தல் இவ்விதியே பரிவ்ராஜகருக்குள்ளது. என்பது

(வி—ரை) நீரைகுடித்தால் என்றது பசியகற்றிக் கொள்வதைநீரிலாவது முடிக்கவேண்டுவதாய் குறித்தது. ஆசமனமென்றது சுத்திக்குறியசௌசாதிகளைக்குறித்தது.

அவதரணிகை

இவ்விதிவைராக்ய மிகுதியால் செய்யும் எந்தக்கருமத்திலும் உண்டென்கிறார்.

வீராத்வாநே வா அநாஶகே வா அபாம் ப்ரவே
ஶே வா அக்நிப்ரவேஶே வா மஹாப்ரஸ்தாநே
வா ||

(இ—ள்) வீரசுவர்க்கத்தை விரும்பி தருமயுத்தம் செய்பவருக்கும் அநசனவிரதத்திலும் ஜலப்பிரவேசத்திலும் அக்னிப்பிரவேசத்திலும் மகாபிரஸ்தானத்திலுமாம். எ—து

(வி—ரை.) முன்வைத்தகாலைப் பின்வாங்காது சுவாமிபக்தி மிகுதியால்சரீராபிமானமொழித்துயுத்தம் செய்பவர் சத்துருக்களால் அடிபட்டுயிரைத்துறப்பார் ஆயின் அவரும் புத்தி பூர்வமாய்உயிர்போகநேர்ந்தழி நீரில்தமது அக்னியை ஹோமம் செய்துஎடுத்தருந்தி விடவேண்டும். அதனால் அவர்செய்தகருமம் எல்லாம் சம்பூர்ணமாகும். அநசனம் என்பதுபிராயோபவேசம் என்படும் அன்னத்தையொழித்து உயிரைத் தொலைத்துக்கொள்ளும்விரதமாம். அதனிடத்துங்கூட ஆசமனம் உண்டு. ஜலப்பிரவேசம் என்பதுவெள்ளப்பிரவேசம் முதலியன அவற்றைச் செய்வதற்கு முன்னமே செய்யவேண்டுவது ஆசமனம்முதலியது அக்

னிப்பிரவேசம் என்றது சர்வசுவாராதி யஞ்ஞங்களில் அங்கும் அக்னிப்பிரவேசத்திற்கு முன்னரே செய்து கொள்ளவேண்டும். மகாப்பிரஸ்தானத்தில் விருத்தாரம்பமுதல் சரீரமுள்ளவரைச் செய்யவேண்டுவதாம்.

அவதரணிகை

மேற்கண்ட விதிப்படி சன்யாசம்பெற்றவன் இலக்கணத்தையும் அவனடையும்பயனையுங்குறிக்கின்றார்.

𑌅𑌥 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌾𑌡𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌣𑌵𑌾𑌸𑌾 𑌮𑍁𑌣𑍍𑌡𑍋𑌽𑌪𑌰𑌿
𑌗𑍍𑌰𑌹𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍀 𑌭𑍈𑌕𑍍𑌷𑌾𑌣𑍋
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌭𑌵𑌤𑌿 ॥

(இ—ள் இனி ஸன்னியாஸிவேறு நிறமுடையவஸ்திரம் பூண்டு முண்டிதனாய்எவ்விதப்பற்றுமற்றவனாய் எங்கும் சுசியாய துரோககலேசமில்லாதவனாய் பிச்சையெடுத்துண்டு ப்ரம்மீபாவத்தைப்பெறுவான். எ—று.

(வி—ரை) வேறுநிறம் என்றது காவி அல்லதுமட்களில் நடந்து மயக்கிது முண்டினதாய் என்றதனால் இங்கு குறிக்கப்பட்டசன்னியாசம் பரமஹம்சமேயாம். துரோகமில்லாமல் என்றது துரோகசிந்தைக்கிடமான எவ்விதப்பற்றுமவனுக்கின்மையால் அவனது விரதமாகிய ஸர்வாபயலக்ஷண திவ்யவிரதத்தையனுஷ்டிக்கும் சிறப்பு அவனிடம் சேர்க்கப்பட்டது "பிச்சை" என்றது தற்செயலாய் கிடைப்பதைக்குறித்தது ப்ரம்மீபாவம் அத்வைதசித்தியாம்.

அவதரணிகை

மேற்கண்டவையெல்லாம் கிரமசன்னியாச விதியாதலால் துறவுள்ளவர்க்கு ஆபத்ஸன்யாஸ விஷயத்தை இனிவிரிக்கின்றார்.

𑌯𑌦𑍍𑌯𑌾𑌤𑍁𑌰𑌃 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌨𑌸𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌵𑌾 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍
𑌏𑌷 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌹𑌾𑌨𑍁𑌵𑌿𑌤𑍍𑌤𑌃 𑌤𑍇
𑌨𑍈𑌤𑌿 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌿𑌤𑌿 ।

(இ—ள்) இனி ஆதுரனாய் இருந்து சன்யாஸம்செய்து கொண்டால் மனதாலாவது வாக்காலாவது ஸன்யாஸம் செய்துகொள்ளவேண்டும். இந்தவழி ப்ரம்மதேவனால்காணப்பட்டது அவ்வழியேப்பிரம்மவித்தாகிய ஸன்னியாஸிசெல்வான். எ—று

(வி—ரை) வாக்காலாவது என்றது பிரேஷ மந்திரமார்த்திரம்உச்சரித்தாவதென்றபொருள்கொடுப்பது மனதாலாவதென்றதுவாக்கால் ஒன்றையுச்சரிக்கச்சக்தியற்ற சமயத்தில் மனதால் ஸர்வஸங்கபரித்யாகம் செய்தவனும் பரமஹம்ஸனேயாம் எவ்வழியிலும் வெளிக்குறிகளைத்தரித்தாலும்தரிக்காத போனபோதிலும் தனதுசொரூபம்ப்ரம்மம் என்றறிந்தான் மேற்கண்டமுக்தத்தனத்தைப்பெற்று அதனிடத்து ஸ்ரீசிவகிருபையால் அபரோக்ஷசாக்ஷாத்காரபரமானந்தத்தைப்பெறுவானெனப்பட்டது.

அவதாரணிகை

இங்ஙனம் கூறியதை சரியென்று அத்ரிஒப்பினதைக்கூறுகிறார்.

ஸ்லவெஹெஷெதஷஹவஷு

(இ—ள்) இப்படியேதான் ஓபகவானே எ—று

அவதாரணிகை

கண்டத்தை உபசங்கரிக்கின்றார்.

ஊ திபாஜுலகூ

(இ—ள்) என்றார் யாக்ஞவல்கர். எ—று

ஐந்தாங்காண்டம் முற்றிற்று.

—(o)—

அவதரணிகை

இனி ஆறாம் கண்டத்தில் பரமஹம்ஸாச்சிரமத்தில் சிரத்தை யுண்டாகவேண்டி அனேகப்ரசித்த பரமஹம்ஸர்களைக்குறித்து பரமஹம்ஸருக்குரியலக்ஷணத்துடன் அவிமுக்த வித்தையை உபசங்கரிப்பாராய்முதலில் அபரோக்ஷாத்வைதாத்மானுசந்தான சித்தபரமஹம்ஸசிகாமணிகளைக் குறிக்கின்றார்

தத்ர பரமஹம்ஸா நாம ஸம்வர்தகாருணி
ச்வேதகேது துர்வாஸ ருபு நிதாக ஜடபரத
தத்தாத்ரேய ரைவதக ப்ரப்ருதயோ
அவ்யக்தலிங்கா அவ்யக்தாசாரா அனுன்மத்தா உன்மத்த
வதாசரந்த: ॥

(இ—ள்) அவர்களில் பரமஹம்ஸர் எனப்பட்டவர் சம்வர்தகர் ஆருணி, சுவேதகேது, தூர்வாஸர், ருபு, நிதாகர், ஜடபாதர், தத்தாத்ரேயர் ரைவதகர் முதலியோர் இவர் ஸ்பஷ்டமாய் பரமஹம்ஸசின்னம் தரித்தவர் ஸ்பஷ்டமாய் பரமஹம்ஸாசார முள்ளவர் மயக்கமற்றவர் மயக்கமுற்றவரைப்போல சஞ்சரிப்பவர். என்பது

(வி—ரை). மேற்கண்டவர் சர்வக்ஞரும் பிரம்மநிஷ்டசிகாமணிகளும் சாந்தோக்யாதி பிரம்மவித்தைகளில் பிரம்மவித்தியாசாரியர் எனப்பட்டவரும் ஆகையால் இவரைச்சிரப்பித்ததாம். இவர்சர்வக்ஞராய் உலகமயக்கமொழித்தவராயினும் இவ்வுலகத்தார் பார்வைக்கு இவர் பெரிய பைத்தியம் பிடித்தவர்போல காணப்படுவோராம். உலகத்தாரை யம்மகான்கள் அத்வைதா சத்தாத்மசொரூபானந்தம் பெறாது வீணில் மயங்குகின்றனரே யென வெறுக்க வியர் அவரை பைத்தியம் பிடித்தவரென நினையாராம் என்றது இதன் கருத்து. ஆகையாற்றான் யாநிசா ஸர்வபூதானாம்

தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ | யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா

நிஶாபஶ்யதோ முநே:॥ எஃதெல்லாப் பூதங்களுக்கும் இரவாகும் அங்கு விழித்திருப்பான் சந்நியாசி எங்கு எல்லாப் பூதங்களும் துயில்கின்றனர். அங்கு சந்நியாசி விழித்திருப்பான் என்றார் ஆன்றோர், எல்லாப்பிராணிகளும் அறியாதுவீணாய் மயங்கிக்கிடக்கும் பரவெளியென்ற மஹாராத்திரியில் எஞ்ஞான்றும் பரமஹம்ஸருக்கு நிட்டை தோன்றுதலால் உலகத்தார் பிரத்தியக்ஷமாகக்கண்டு மயங்கும் உலகமனைத்தும் அவர்களுக்குப் புலப்படாமையால் அது அவர்க்கிரவேயாமென்றார்கள். ஆயின் பரமஹம்ஸாச்சிரமத்திற் சிறந்த மேற்கண்ட பரமநிஷ்டர்கள் முற்குறிக்கப்பட்ட சதருத்ரீய பாராயணம் அவிமுக்தோபாஸ்தி முதலிய ஞானமார்க்கங்களால் ஸ்ரீசிவப்பிரசாதம் பெற்று அவனது சொரூபசாக்ஷாத்கார பரசித்திபெற்றவராயென்பது அவிமுக்தமகோபாசனைவித்தையின் அர்த்தவாதமாம், வேறு ஜாபாலத்தில் மற்றுமுள்ள அனேக வேதாந்தங்களிலும் இவர் பெருமை அளவிறந்ததாம். இங்கு முதலியோரென்று குறிக்கப்பட்டது. யாக்ஞவல்கியர், கௌதமர் சுகர் முதலியோராம்'

அவதரணிகை

முன்னர் முதல் மூவ்வாச்சிரமங்களினின்றும் சன்னியாஸாச்சிரமமடையும் வழி ஒருவாறுகுறிக்கப்பட்டாலும் பகூதகர் குடீசகர், ஹம்ஸர், இவர்கள் பரமஹம்ஸராகும் வழிகூறப்படாமையின் அடுத்த வித்தையாகிய அவிமுக்ததாரக வித்தையில் பரமாதிகாரியாகிய பரமஹம்ஸன் சொல்லப்பட்டிலதாதலால் பெருங்குறைவருமெனக்கருதி அதன் முறையைகூறுகின்றார்.

த்ரிதண்டம் கமண்டலும் ஶிக்யம் பாத்ரம் ஜலபவி
த்ரம் ஶிகாம் யஜ்ஞோபவீதம் சேத்யேதத்ஸர்வம்
ஹ்ஸ்வாஹேத்யப்ஸு பரித்யஜ்யாத்மாநமந்வி
ச்சேத்॥

(இ—ள்) திருதண்டம் கமண்டலம் சிக்யம் பிக்ஷாபாத்திரம் ஜலத்தை வடிக்கட்டும் வஸ்திரம் சிகை யக்ஞோப

வீதம் முதலிய எல்லாவற்றையும் பூர்வாஹா முதலியமந்திரங்களால் நீரில்போட்டு எப்பொழுதும் ஆத்மசொரூபத்தை த்யானிக்கவேண்டும். ௭—ஜ

(வி—ரை) இமற்றில் திருதண்டம் சிக்கை யஞ்ஞோபவீதம் முதலியனகுடீசகர் பகூதகர்க்குள்ளனவாம் மற்றவை ஹம்ஸருக்குள்ளன. எல்லாவற்றையுமென்றமையால் முற்கண்டத்தில் குறித்த முண்டிதம் முதலியவிலக்கணமே பரமஹம்ஸனுக்குள்ளதாமென்க- ஆத்ம சொரூபத்தை யபூர்வமாய் விதித்தலால் இதுவரைசெய்துவந்த ஆத்துமானுமாத்துமசம்மிச்ரசவிசேஷப்ப்ரம்மவழிபாட்டிலும்மேலானதாய் சொரூபோபாஸ்தியே பரமஹம்ஸனுக்குமுக்கியலக்ஷணமென்றதாயிற்று’

அவதரணிகை

மேல் அவ்வித பரமாதிகாரியான பரமஹம்ஸ ஸந்யாஸியின் இலக்கணத்தையும் அவனுடையும் பெறும்பேற்றையும் குறித்துஎடுத்த உவிமுக்ததாரகவித்தையைஉபசங்கரிக்கின்றார்,

𑌯𑌥𑌾 𑌜𑌾𑌤𑌰𑍂𑌪𑌧𑌰𑌾 𑌨𑌿𑌰𑍍𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾 𑌨𑌿𑌷𑍍𑌪𑌰𑌿-
𑌗𑍍𑌰𑌹𑌾𑌸𑍍𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌾𑌃
𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑌾𑌨𑌸𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑌂𑌧𑌾𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤-
𑌕𑌾𑌲𑍇 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑍈𑌕𑍍𑌷𑌮𑌾𑌚𑌰𑌨𑍍𑌨𑍁𑌦𑌰𑌪𑌾𑌤𑍍𑌰𑍇-
𑌣 𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌 𑌸𑌮𑍌 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌶𑍂𑌨𑍍𑌯𑌾𑌗𑌾𑌰
𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑌤𑍃𑌣𑌕𑍂𑌟𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌵𑍃𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌕𑍁𑌲𑌾𑌲
𑌶𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌗𑍃𑌹𑌨𑌦𑍀𑌪𑍁𑌲𑌿𑌨𑌗𑌿𑌰𑌿
𑌕𑍁𑌹𑌰𑌕𑌨𑍍𑌦𑌰𑌕𑍋𑌟𑌰𑌨𑌿𑌰𑍍𑌝𑌰𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑍇𑌷𑍁
𑌤𑍇𑌷𑍍𑌵𑌨𑌿𑌕𑍇𑌤𑌵𑌾𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃
𑌶𑍁𑌕𑍍𑌲𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑌰𑌾𑌯𑌣𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌶𑍁𑌭-
𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌨𑌪𑌰𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌦𑍇𑌹𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌕-
𑌰𑍋𑌤𑌿 𑌸 𑌪𑌰𑌮𑌹𑌂𑌸𑍋 𑌨𑌾𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌤𑍍 ॥

(இ—ள்) பிறந்தவாறுரூபந்தரித்து த்வந்த்வம் ஏதுமில்லாதவனாய்பிரக்ரகசூன்யனாய், தத்துவப் பிரம்மமார்க்கத்தில் நிஷ்டையுள்ளவனாய் மனச்சுத்தியுள்ளவனாய் பிராணரக்ஷணத்துக்காகவே உசிதகாலங்களில் உதரபாத்திரத்தில்பிக்ஷையெடுத்து புசிப்பவனாய், அவிமுக்தனாய், லாபாலாபங்களிற் சமனாய் சூன்யகிருகம், தேவாலாயம, புற்கூட்டம், புற்று மறத்தடி குயவன்வீடு அக்னிஹோத்திரசாலை ஆற்றுமணற்குன்று மலைகுகை பொந்துக்கள் மரச்சந்து மலையருவி இவற்றில் தரையிலேயே நியமமில்லாது வசிப்பவனாய் எவ்விதமுயற்சியுள்ளவனாய் மமதையொழிய சுக்லத்யானம் செய்பவனாய் பிரம்மநிஷ்டனாய் நன்மைதீமை இருவினைகளையுமொழித்து ஸன்னியாஸத்தால் தேகத்தைவிடுபவனே பரமஹம்ஸனாம் என்றதுபநிடதம் எ—று

(விந்—ரை.) "பிறந்தவாறு ரூபந்தரித்தல்" என்பது வஸ்திராதிகளையும்விட்டு உலகத்திலுள்ள எதனையும் அறியாதகுழந்தையைப்போலிருப்பார் அவர் ஸ்வீகரம் கொடுக்கும் சீதம், உஷ்ணம் சுகம் துக்கம், ஸத்து அஸத்து, மேல் கீழ், சுவர்க்கம் நரகம், என்பதாதிகள் த்வந்த்வங்களாம் அவைகள் எவையும் தம்மையணுகப் பெறாதவன் நிர்த்வந்த்வன்' எனப்படுவான், 'பரிக்ரகம்' என்பது பற்று அஃதற்றவன் நிஷ்பரிக்ரகன்' தத்துவமார்க்கத்திலும், சோதனைக்காக பரம்மமார்க்கத்தில் அபரோக்ஷத்திற்காக நிஷ்டையென்பது விசாரம் அஃதுள்ளவன் மனச்சுத்தி சங்கற்பமின்மை உசிதகாலம் பசிகாலம் உதரபாத்திரம் = வேறு பாத்திரங்கள் இல்லாமையால் வயிறே பாத்திரமாககொள்ளப்படும் இது பரமோத்தமமான 'அஜகர' விருத்தியைக்குறித்தது அதாவது 'அஜகரம்' எனப்படும் மலைப்பாம்பு கிடந்த விடத்தே தற்செயலாய் கிடைக்கும் ஆகாரங்களை உட்கொள்ளுவதுபோல இருக்கவிடத்தே கிடைக்கும் ஆகாரங்களையுட்கொள்ளுதல் உதரபாத்திரமாம்' அல்லது வயிற்றைக்காட்டி ஏற்றலுமாகலாம் அவிமுக்தன் = ஜீவன்முக்தன் அவ்விதம் இருக்கவிடத்தில் ஆகாரங்கிடைக்காதபொழுதும் கிடைத்தபொழுதும் துக்க சுகங்

களைப் பெறாது நித்தியானந்தனாய் இருக்கவேண்டும் என்பது'லாபாலாபசமன்' என்றதன் பொருள். சூன்யகிருகம் = பாழ்வீடு = எவரும் வசிக்காதவிடம் இங்கு குறிக்கப்படும் எவ்வகையிடமும் இதர ஜனசங்கங்கள் இராக்காலங்களில் சேரக்கூடாதனவாம். இவ்வித விடங்களே இருவருக்குரியதென்றதைக் கைவல்யோபநிடதமும். 'விவிக்ததேசே' இடையூறில்லாவிடத்து என்று சிறப்பித்ததாம். மேற்கண்டவிடங்களிலும் ஒரே இடத்தில் நீண்டகாலம் வசிக்காது நாடோறும் மாறிவரவேண்டுமென்பது "நியமமில்லாது" என்பதாதி வாக்யப்பொருள் = முயற்சியேதுவும் என்றும் பந்தஹேதுவே யாதலால் அவற்றை யொழித்திடல் அவருக்கவசியம் என்பதாயிற்று. முயற்சியொழிந்தால் மமதையும் தொலையுமென்றகருத்தால் 'மமதையொழிய' என்றது 'மமதை' என்றது ஸர்வாந்த மூலமான அகந்தையையும் உபலக்ஷணமாய்க் குறித்ததாம். சுக்லம் = சொரூபம் தேயு, அதாவது பிரத்யகாத்தும சொரூபமாம். 'பிர்ம்மநிஷ்டை' என்பது அபரோக்ஷசாக்ஷாத்காரமாம் பிரம்மநிஷ்டை உண்டாகும் க்ஷணத்திலேயே இருவினைகள் ஒழியும் என்றகருத்தால் இருவினையொழித்து என்றார். 'இருவினை' என்பது அவித்தையைக் குறித்தசொல்லாகவே ப்ரம்மஞானத்தால் அவித்தையொழியும் என்றதாயிற்று. அப்படிக்காயினும் பிராரத்த சரீரம் உள்ளவரை மேற்கண்ட லக்ஷணம் அமைந்த சன்யாஸம் காயோகத்தையனுஷ்டித்து 'சரீரம்' எனப்படும் பிரபஞ்சத்துக்கு முற்றும் விலக்ஷணமான சுத்தாத்தும சொரூப சாக்ஷாத்காரப் பிரம்மானந்த சாம்ராஜ்யம் பெறுபவனே பரமஹம்ஸனாம் என்பதுபநிடதத்தின் முடிந்தகருத்தாம். ஆயின்மேற்குறித்த பரமஹம்ஸருக்கே ஜுக்ததாரகவித்தையில் பிண்டாவிமுக்தோபாஸ்தியில். அதிகாரமென்றும அண்டாவிமுக்தோபாஸ்தியில் அகிலப்பிராணிகளுக்கும் அதிகாரம் உண்டென்றும் அம்புலி சூடிய பிரான் திருவருளின்றி எவர்க்கும் அபரோக்ஷாத்வைதப் பிரம்மானந்த பரமபாக்கியம் கைகூடாதென்பதே இவ்வுபநிடதத்தில் பூர்ணமாய் அமைந்த மகாவாக்கியார்த்தமாம் என்பதுமோர் சித்தியமேயாம். சிவகிருபை.

பரிபூர்ணம்

ம

இங்ஙனங்கவுணியகுலப் பாலாழிக்குக் கவுத்துவ மணியாய்த்தோன்றி, ஸ்ரீமேதா தக்ஷிணாமூர்த்தி கருணாகடாக்ஷத்தாற் சகல கலைகளுமோதி யுணர்ந்து மிச்சிரமண்டலத்திற் றமது விஜயப்பிரதாப நிலைபெற நாட்டிய மஹாதேவதீட்சிதர் வம்சதிலகராய வையாகரண ஸார்வபௌம ஸ்ரீராமஸ்வாமிதீக்ஷிதர் செல்வக்குமாரரும், ஸ்ரீஸீதாம்பா கர்பசுத்தி முத்தமோத்தமரும், ஸ்ரீமத் பாரதவாஜ குல ஜலதிக்குக் கவுத்துவமணியாய் அத்வைத வித்யாசாரியராய், நூற்று நாலுகிரந்தங்களை நிர்மித்தருளிய ஸ்ரீமது அப்பையதீக்ஷிதேந்திரர் வம்சத்தில் அவதரித்த ஷட்சாஸ்திரவல்லப் பாரசைவசுவர உபநிஷன் மார்க்கப் பிரவர்த்தக ஸ்ரீ மஹா மஹோபாத்தியாய ஸ்ரீமது தியாகராஜகுரு புங்கவர் சரணஸேவாபாராயணரும்

பிரத்யக்பரசிவநிஷ்டாதுரந்தர பரசம்பவ பாதபத்ம

ரேணுசேகனத் தில்லன் புகந்துள்ளவரும

"பிரம்மவித்தியா" பத்திராதிரூபமான

பரசமய பஞ்சானன பாஞ்சஜன்னிய

பண்டித ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸமகிபுங்கவர்

வடமொழியிலிருந்து

தென்மொழியிலியற்றிய

ஜாபாலோபநிடதத்

தமிழுரை

முற்றிற்று.